
பக்கங்கள் 16+5

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## எம்.பி. பதவி இழந்த டயனா வெளிநாடு செல்லத் தடை!



நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந்துள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்கு வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடை 02

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 26 வியாழக்கிழமை 09.05.2024 அதிர்வு 281



# நரகத்தில் விழுந்த இலங்கையை குறுகிய காலத்தில் மீட்டெடுத்தேன்

## நாடாளுமன்றில் ஜனாதிபதி ரணில் பெருமிதம்

என்னிடம் இருந்த திட்டத்தாலும் அனுபவத்தாலும் சர்வதேச தொடர்புகளாலும் நரகத்தில் விழுந்த இந்த நாட்டைக் குறுகிய காலத்தில் மீட்டெடுத்தேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஒற்றுமையுடனும் பொது உடன்பாட்டுடனும் முன்னோக்கிச் சென்றால், இலங்கையை உலகில் அபிவிருத்தியடைந்த நாடாக விரைவில் உயர்த்த முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டின் எதிர்கால சந்ததியினருக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பை நழுவ விட வேண்டாம் எனக் கேட்டுக் கொண்ட ஜனாதிபதி, இந்த இக்கட்டான நேரத்தில் நாட்டை விட்டு தனிப்பட்ட இலட்சியங்களைக் கருத்தில் கொண்டு செயற்படுவது மாபெரும் அழிவின் ஆரம்பமாக அமையும் என்றும் எச்சரிக்கை விடுத்தார். 03

# செப்டெம்பர் 17 - ஒக்டோபர் 16 இற்குள் ஜனாதிபதித் தேர்தல்

## தேர்தல்கள் ஆணைக்குழு விசேட அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் விசேட அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, எதிர்வரும் செப்டெம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 16ஆம் திகதிக்கும் இடையில் ஜனாதிபதித் தேர்




தல் நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இன்று விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் இதனை அறிவித்துள்ளார்.





# மே 15 இல் நாடாளுமன்றத்தைக் கலைக்குக: பஸிலின் கோரிக்கையை நிராகரித்த ரணில்

நாடாளுமன்றத்தை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கலைத்துப் பொதுத்தேர்தலுக்குச் செல்லுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார் என அறியமுடிகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போது மேற்படி யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

அரசமைப்பின் பிரகாரம் முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் முடிவிலேயே ஜனாதிபதி இருக்கின்றார் எனவும் கூறப்படுகின்றது.

# மகாவலி கங்கையில் மூழ்கி குடும்பஸ்தர் ஒருவர் மரணம்



கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வராதென்ன பகுதியில் மகாவலி கங்கையில் மூழ்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது என்று கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டி, யடஹலகல பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயது நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் தனது நண்பருடன் மகாவலி கங்கையில் நீராடிக் கொண்டிருக்கும்போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வீடு புகுந்து வாள்வெட்டு! குடும்பஸ்தர் ஒருவர் சாவு!!

காலியில் வீடு புகுந்து வன்முறைக் கும்பல் மேற்கொண்ட வாள்வெட்டுத் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

தொட்டகொட, குருந்தகந்த பிரதேசத்தைச் சேர்ந்த ஹிச்சிமல்லி என்றழைக்கப்படும் 43 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தபோது வாள் வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் என்று அக்மீமன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் தகராறு காரணமாக நேற்றிரவு இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவரின் மூத்த சகோதரனும் வாள்வெட்டுக்கு இலக்காகிக் காயமடைந்த நிலையில் காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ள அக்மீமன பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**எம்.பி. பதவி...**

உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்கு இலங்கை நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த சட்ட ரீதியில் அங்கீகாரம் கிடையாது என உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்திருந்த நிலையிலேயே, கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இதேவேளை, டயனா எம்.பி. பதவியை இழந்ததால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு முஜிபுர் ரஹ்மானை ஐக்கிய மக்கள் சக்தி நியமித்துள்ளது.

# நரகத்தில் விழுந்த இலங்கையை குறுகிய காலத்தில் மீட்டெடுத்தேன்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையிலேயே இதனைத் தெரிவித்தார்.

இன்று நாம் எவ்வாறு செயற்படுகின்றோம் என்பதைப் பொருத்தே எமது எதிர்காலம் தீர்மானிக்கப்படும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அன்று தம்மை நாட்டுக்குத் துரோகம் செய்தவர்களாக முத்திரை குத்திக்கொள்ள போகின்றார்களா அல்லது நாட்டின் மீது அன்பு கொண்டவர்கள் என்ற அடையாளத்தை பெறப் போகின்றார்களா என்பதை தீர்மானிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் மாத்திரமின்றி, மதத் தலைவர்கள், தொழிற்சங்கங்கள், வர்த்தக சமூகம், அரச சார்பற்ற அமைப்புகள், வெவ்வேறான சிந்தனைகளை கொண்ட தலைவர்கள், சமூகத்தில் தாக்கம் செலுத்தக்கூடியவர்கள் உள்ளிட்ட சகலரும் பொது உடன்பாட்டுடன் இணைந்துகொள்ள வேண்டியது அவசியம் என்பதையும் ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் இன்று ஆற்றிய முழுமையான உரை வருமாறு:-


"நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பணியை நான் பொறுப்பேற்றப் பின்னர், பொருளாதாரத்தின் உண்மையான நிலை குறித்த அனைத்துத் தகவல்களையும் அவ்வப்போது இச்சபையில் கூறியுள்ளேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக முன்னெடுத்த பொருளாதார திட்டங்களையும் எதிர்காலப் பொருளாதாரத் திட்டங்கள் குறித்த உண்மைகளையும் கூறினேன். பற்றி எரிந்துகொண்டிருந்த நாட்டையே நான் பொறுப்பேற்றேன். நாடு நரகமாக மாறியிருந்தது. பொருளாதாரம் முடங்கிக் கிடந்தது. பணவீக்கம் 70 சதவீதமாக உயர்ந்திருந்தது.

மொத்த தேசிய உற்பத்தியில் 10-12 சதவீதத்திற்கும் அதிகமாக வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை அதிகரித்திருந்தது. வட்டி வீதம் 30 சதவீதமாக உயர்ந்திருந்தது. டொலரின் பெறுமதி சுமார் 450 ரூபா வரையில் அதிகரித்திருந்தது. அந்நியச் செலாவணி கையிருப்பு பூஜ்ஜியமாகிப் போனது.

ஒரு வாரத்துக்குக் கூட உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய பணம் இருக்கவில்லை. நாட்டில் பெரும்பகுதியானோர் வீதிகளில் இறங்கினர். பல நாட்களாக மக்கள் வரிசையில் நின்றனர். பல எதிர்ப்பு போராட்டங்களில் பங்கெடுத்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் தான் நாட்டையும் பொருளாதாரத்தையும் மீளக் கட்டியெழுப்பும் சவாலை நான் ஏற்றுக்கொண்டேன். அந்த நேரத்தில் நாட்டைக் காப்பாற்றும் சவாலை ஏற்க எவரும் முன்வரவில்லை. பல்வேறு நிபந்தனைகளை முன்வைத்தனர். ஆனால், நான் நிபந்தனையின்றி நாட்டை



பொறுப்பேற்றுக்கொண்டேன். நாடாளுமன்றத்தில் எனது கட்சிக்கு ஒரேயொரு ஆசனம் மட்டுமே இருந்தது.

அத்தகைய ஆபத்தான சூழலிலே இந்தப்பணிகளைதோளில்ஏற்றுக்கொண்டேன். மூன்று காரணங்களுக்காகவே சவாலை ஏற்றுக்கொண்டேன். என்னிடம் ஒரு திட்டம் இருந்தது. அனுபவம் இருந்தது. சர்வதேச தொடர்புகள் இருந்தன. அதனால், நரகத்தில் விழுந்த இந்த நாட்டை மீட்க முடியும் என்ற நம்பிக்கையும் என்னிடம் இருந்தது. அந்த நம்பிக்கையுடன் நாட்டைக் குறுகிய காலத்தில் மீட்டெடுத்தேன்.

அப்போதிருந்து, நாங்கள் பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் மறுசீரமைப்புத் திட்டங்களை முறையாக செயற்படுத்த ஆரம்பித்தோம். இதன் பலனாக, 2023 ஆம் ஆண்டின் மத்தியில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டது.

இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி குறைந்தது மூன்று சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கின்றோம். பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் இதனை எதிர்வுகூறியுள்ளன. பணவீக்கம் தற்போது 1.5 சதவீதமாக குறைந்துள்ளது. பல ஆண்டுகளாக பற்றாக்குறையாக இருந்த முதன்மை கணக்கு கையிருப்பு, 2023 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.6 சதவீத உபரியாக மாற்றப்பட்டது.

பல தசாப்தங்களுக்குப் பிறகு, 2023 ஆம் ஆண்டில் நடப்புக் கணக்கில் ஒரு உபரி நிலுவைத்தொகை ஏற்பட்டது. வட்டி விகிதம் 10-13 சதவீதம் வரையில் குறைந்துள்ளது.

சுற்றுலாத்துறை புத்துயிர் பெற்றுள்ளது. வெளிநாட்டுப் பணியாளர்கள் அதிகளவில் பணம் அனுப்புகிறார்கள். 2024 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் டொலரின் பெறுமதியை 300 ரூபாவை விடவும் குறைவாகக் கொண்டுவர முடிந்தது. அந்நியச் செலாவணி கையிருப்பு 5 பில்லியன் டொலர்களுக்கு மேல் அதிகரித்துள்ளது.

சவாலான, கடினமான, சரியான பாதையை நாங்கள் பின்பற்றியதால் இந்த நிலையை எங்களால் அடைய முடிந்தது. இந்நாட்டில் சிலர் நாங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் விமர்சித்தார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு முதல் நாட்டின் பொருளாதார ஒழுங்கமைப்புக்கான அனைத்துச் செயற்பாடுகளையும் விமர்சித்தனர். ஆனால், அந்த விமர்சனங்கள், அவதூறுகள், கட்டுக்கதைகள் என அனைத்துக்கும் மத்தியில் நாம் தொங்கு பாலத்தை கடக்க முயற்சித்தோம். அது மட்டுமே ஒரே வழியாகும் என்பதையும் நாம் உணர்ந்துகொண்டிருந்தோம்.

2023 செப்டெம்பர் முதல், படிப்படியாக முன்னேறினோம். பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளில் விலைச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அரசின் வருவாய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீதமாக சரிவடைந்திருந்தது. அதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20 சதவீதமாக காணப்பட்ட அரசின் செலவினங்களை நிர்வகிக்க வருவாய் போதுமானதாக இருக்கவில்லை. அதனால் அரசின் வருவாயை அதிகரித்த வேண்டிய கட்டாயம் காணப்பட்டது.

இதற்கு முன்பிருந்த சில அரசுகள், தொழில் வழங்கவும் சம்பளத்தை வழங்கவும், எரிபொருள், மின்சாரம், குடிநீர் சேவைகளைக் குறைந்த செலவில் வழங்கவும், வரவு - செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிவர்த்திக்கவும் வெளிநாடுகளிடம் கடன் பெற்றிருந்தனர். இல்லாவிட்டால் பணத்தை அச்சிட்டன. பல வருடங்களாக இதேமுறையில் பழகியிருந்ததால், நாம் ஏற்படுத்திய மாற்றத்தை தாங்கிக்கொள்வது கடினமாக இருந்தது.

ஆனால், நாட்டின் முன்னேற்றத்துக்கான மாற்றத்தை ஏற்படுத்த யாராவது முன்வர வேண்டியது அவசியம்.

தொடர் சீர்திருத்தங்கள் மூலம் நாட்டில் நிதி ஒழுக்கத்தை உறுதிசெய்தோம். பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த அடுத்தபடியாக கடன் மறுசீரமைப்பைச் செய்ய வேண்டியிருந்தது.

2022 செப்டெம்பரில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கும் அதுவே காரணமாகும். 2022 டிசம்பரில் மொத்தக் கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 128 சதவீதமாக காணப்பட்டது. அது நல்ல நிலைமையாக தெரியவில்லை. அதனால், கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை செயற்படுத்தினோம். அதனை மூன்று கட்டங்களின் கீழ் செயற்படுத்தினோம்.

அதில் முதலாவதாக கடன் மறுசீரமைப்பு. அந்தப் பணி 2023 ஆம் ஆண்டில் நிறைவடைந்தன. இரண்டாவதாக, வெளிநாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் உத்தியோகபூர்வமாக பெறப்பட்ட கடனை மறுசீரமைக்க வேண்டியிருந்தது. அந்த நாடுகளுடனான கலந்துரையாடலுக்குப் பின்பு, 2023 நவம்பருக்குள் இந்தக் கடன்களை மறுசீரமைப்பது குறித்து கொள்கை ரீதியான உடன்பாட்டை எட்ட முடிந்தது.

அதற்காக பாரிஸ் கிளப் மற்றும் அதில் இணையாத சீனா போன்ற நாடுகளும் இணக்கம் தெரிவித்தன. தற்போது கடன் வழங்கிய நாடுகளுடன் புரிந்துணர்வு

தொடர்ச்சி▼

# நரகத்தில் விழுந்த இலங்கையை குறுகிய காலத்தில் மீட்டெடுத்தேன்

தொடர்ச்சி▲

ஒப்பந்தம் செய்து அந்த பணிகளை நிறைவுக்கு கொண்டுவர வேண்டியது அவசியம்.

இலங்கை அரசு தற்போது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுடன் கலந்துரையாடுகின்றது. அதேபோல், சீன வங்கியுடனும் இந்தக் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மூன்றாவதாக வணிகக் கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் காணப்பட்டன. இலங்கை அரசின் சார்பில் பணிபுரியும் லாசார்ட் மற்றும் கிளிபோர்ட் சான்ஸ் ஆகிய ஆலோசனை நிறுவனங்கள் கடன் வழங்குநர்களுடன் பேச்சு நடத்தி வருகின்றன.

இரு தரப்பிலும் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் பேச்சு வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றது. இந்த வருடத்தின் மத்தியில் இந்த கலந்துரையாடல்கள் அனைத்தையும் நிறைவு செய்ய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். 2032 ஆம் ஆண்டுக்குள் மொத்தக் கடனை மொத்த உள்நாட்டு உற்பத்தியில்95சதவீதமாகக்குறைப்பதேகடன்மறுசீரமைப்பின் இறுதி இலக்காகும். அரசின் மொத்த நிதித் தேவையை ஆண்டுதோறும் 13 சதவீதமாகவும், வெளிநாட்டுக் கடன் சேவையை வருடாந்தம் 4.5 சதவீதமாக பேணுவதும் அடுத்த இலக்காக உள்ளது.

கடன் நிலைத்தன்மையை அடைவதற்கான ஒரே வழி இதுதான். கடன் நிலைத்தன்மையை உறுதி செய்யாமல் நீண்ட கால அடிப்படையில் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவது சாத்தியமில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் நடத்தப்பட்ட அரச சோதனை அறிக்கையின்படி ஊழலுக்கு எதிரான திட்டத்தைச் செயற்படுத்த ஆரம்பித்திருக்கின்றோம்.

கடந்த இரண்டு வருடங்களாக நாம் நடைமுறைப்படுத்திய பொருளாதார மறுமலர்ச்சி வேலைத்திட்டத்தின் பெறுபேறுகள் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்க முடிந்திருக்கின்றது. அஸ்வெசும உள்ளிட்ட ஏனைய நிவாரணத் திட்டங்களின் கீழ் நாட்டில் உள்ள வறிய மக்களுக்கும் பெருமளவிலான நிதியை நேரடியாகக் கொண்டு சேர்க்க முடிந்தது. சிறுநீரக நோயாளிகள், முதியோர், ஊனமுற்றோர் ஆகிய தரப்பினருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் 2024 ஏப்ரல் முதல் 50 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் சமூர்த்தியை விட மூன்று மடங்கு அதிகமான பணம் வறிய மக்களைச் சென்றடைகின்றது. இந்த நிவாரணத் திட்டங்களுக்காக 2024 ஆம் ஆண்டில் 205 பில்லியன் ரூபா செலவிடப்படும். இரண்டாம் உலகப் போரின் பின்னரே இலங்கையில் முதன்முதலில் நிவாரணத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் இத்தகைய தொகை நிவாரணம் வழங்குவதற்காக செலவிடப்படவில்லை.



2022 ஆண்டு சிறுபோகத்திலும், 2022ஃ2023 பெரும் போகத்திலும் , 2023 சிறு போகத்திலும், 2023ஃ2024 பெரும் போகத்திலும் வெற்றிகரமான அறுவடையைப் பெற்றுக் கொண்டோம். அவற்றில் ஒரு பகுதியை இலவசமாக மக்களுக்கு பகிர்ந்தளிக்க அரசு எதிர்பார்த்தது.

அதன்படி கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் தமிழ், சிங்களப் புத்தாண்டுக் காலத்தில் வறிய மக்களுக்கு இலவச அரிசி வழங்கப்பட்டது. இனி வரும் காலங்களிலும் வறிய மக்களின் மேம்பாட்டுக்கான அனைத்து முயற்சிகளையும் அரசு முன்னெடுக்கும். 2024 ஆம் ஆண்டில் 12 பில்லியன் ரூபாவை செலவிட எதிர்பார்க்கப்படுகின்றது.

2024 ஜனவரி முதல் அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் 5000 ரூபா வாழ்வாதாரக் கொடுப்பனவாக வழங்கப்பட்டது. தற்போது 10,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் முதல் ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு 2,500 ரூபா கொடுப்பனவும் வழங்கப்பட்டது.

வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடும்போது இது போதுமானதாக இல்லை. இருப்பினும் அரசால் இயன்ற அளவில் இந்த நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ரூபாயின் பெறுமதி அதிகரித்திருப்பதால், கடந்த சில மாதங்களில் இறக்குமதி பொருட்களின் விலையும் கணிசமாகக் குறைந்துள்ளது. அதனால் எரிவாயு, கனிய எண்ணெய் , பால்மா போன்றவற்றின் விலைகளும் குறைந்தன. மேலும், வட்டி வீதம் குறைவதால் தொழில் துறையினருக்கும் நிவாரணம் கிடைக்கும்.

2024 ஆம் ஆண்டிலும் சம்பள அதிகரிப்பு தொடர்பிலான கோரிக்கைகள் வந்தாலும் அரசின் வருமானம் அதற்குத் தகுந்த வகையில் அதிகரிப்பைக் காட்டவில்லை. கடந்த காலங்களில் பொறுப்பற்ற முறையில் வழங்கப்பட்ட பல்வேறு சலுகைகள் எமது பொருளாதாரத்தையும் மக்களின் வாழ்க்கையையும் அழித்தது. அனைத்துப் பிரிவு மக்களும் கடந்த இரண்டு வருடங்களாக மிகவும் கடினமான பாதையில் பயணிக்கின்றனர்.

2024 ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சியை கவனத்தில் கொண்டு சம்பளத் திருத்தம் குறித்து தீர்மானிக்க முடியும்.

இப்போது செயற்படுத்தப்படும் பொருளாதாரத் திட்டங்களை கைவிட்டால் மீண்டும் பெரும் நெருக்கடியைச் சந்திக்க நேரிடும். 2022 செப்டெம்பர் முதல் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் மூலம் பல சாதகமான பலன்களை அடைந்துள்ளோம்.

பெரும்பாலும் வெளிநாட்டு பரிவர்த்தனைகளைச் சார்ந்து இருக்கும் சிறிய பொருளாதாரம் என்பதால், நாம் ஏற்றுமதியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். மேலும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வகையில் பசுமைப் பொருளாதாரம் குறித்து கவனம் செலுத்த வேண்டும். தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட புதிய தொழில்நுட்ப அம்சங்களை பொருளாதார செயற்பாடுகளில் இணைத்துக்கொள்ள வேண்டும்.

அவ்வாறின்றி, ஒரு பொருளாதாரத்தை நீண்ட காலத்திற்கு நிலைநிறுத்த முடியாது. பொருளாதாரச் சீர்திருத்தங்களின் பலன்களை சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் முறையாகப் பகிர்ந்தளிப்பதை மையமாகக் கொண்ட சமூக-சந்தை பொருளாதார அடித்தளத்தை நாம் நிறுவ வேண்டும்.

நமது பொருளாதார வலிமையை அதிகரிக்க, விரைவான பொருளாதார வளர்ச்சிப் பாதையில் நாம் பயணிக்க வேண்டும். உயர் பொருளாதார வளர்ச்சியால், நமது கடன் சுமை குறையும். அதுமட்டுமின்றி வாழ்க்கைச் செலவும் குறையும்.

தொடர்ந்தும் மக்கள் மீது சுமையேற்றும், நட்டத்தில் இயங்கும் அரச தொழில் முயற்சிகளை எமது பொருளாதாரத்தால் முன்னெடுக்க முடியவில்லை. இதற்கான மாற்றுத் திட்டமொன்றை அரசு முன்மொழிந்துள்ளது.

தனியார் துறையின் பங்களிப்பின் மூலம் அரச நிறுவனங்களை வெற்றிகரமாக நடத்த முடியுமென்றால், மக்கள் மீது வரிச் சுமையை ஏற்றி, நட்டத்தை ஏற்படுத்தும் அரச தொழில்முயற்சிகளை அப்படியே தொடரக்கூடாது.

நாட்டில் பெருமளவிலான காணிகள் முறையாகப் பயன்படுத்தப்படாமல் மக்களுக்குச் சுமையேற்றும் வகையில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. கடந்த காலங்களில், அந்த காணிகளில் தனியார் துறையால் வெற்றிகரமான விவசாய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்தத் திட்டங்களின் மூலம் அன்றிருந்த அரசாங்கங்கள் அதிக வருமானம் பெற்றன. அந்தச் செயற்பாடுகளின் மூலம் நாட்டுக்கு அதிக அந்நியச் செலாவணியும் கிடைத்தது.

எனவே, வர்த்தக ரீதியில் செயற்படும் ஏற்றுமதியில் கவனம் செலுத்தும் உள்நாட்டு தனியார் துறையின் பங்களிப்புடன் வர்த்தக ஏற்றுமதி விவசாயப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கையை எடுத்துள்ளோம்.

1930களின் பின்னர் சுமார் 20 இலட்சம் விவசாயக் குடும்பங்களுக்கு அவர்களது காணி உரிமையை வழங்கும் 'உறுமய' வேலைத்திட்டம் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தொடர்ச்சி▼

# நரகத்தில் விழுந்த இலங்கையை குறுகிய காலத்தில் மீட்டெடுத்தேன்

தொடர்ச்சி▲

இந்தத் திட்டம் அவர்களுக்கு காணியின் முழு உரிமையையும் வழங்குகிறது. இத்திட்டத்தின் அடிப்படையில் இலங்கை முழுவதும் ஆயிரக்கணக்கான விவசாய வர்த்தகர்கள் உருவாவதைத் தடுக்க முடியாது.

மேலும், தற்போதுள்ள விவசாய நிலங்களில் இருந்து உச்ச அளவில் பயனைப் பெற்றுக்கொள்வது அவசியம். அதன்படி, விவசாய உற்பத்தியை மேம்படுத்தும் அடிப்படையில் விவசாய நவீனமயமாக்கல் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் விவசாயிகளை வலுப்படுத்துவது இந்தத் திட்டத்தின் ஒரு நோக்கமாகும்.



தற்போது 26 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அடுத்த சில மாதங்களில் மேலும் 75 பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்த வேலைத்திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தில் மிகவும் வலுவான துறையாக இருந்த பல்வேறு சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் செயலிழந்தன. அந்த வணிக நிறுவனங்கள் மூடப்பட்டன. அவற்றை மீட்டெடுப்பதற்கான திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பாரிய அளவில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. பல்வேறு கடன் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பராட்டே சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்ட குறுகிய காலத்திற்குள் இத்துறைக்கு மேலும் ஒரு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. திறைசேரியில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான விசேட பிரிவும் நிறுவப்பட்டு செயல்பாடுகள் ஒருங்கிணைக்கப்படுகின்றது.

சுற்றுலாத்துறை வேகமாக வளர்ந்து வரும் தொழிற்துறையாக மாறியுள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களுடன் ஒப்பிடும்போது, 2024 ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 75 வீதத்திற்கும் அதிகமான வளர்ச்சி காணப்படுகின்றது. இந்த வருடத்தில் இதுவரை சுமார் 8 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். சுற்றுலாத்துறைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான விரிவான திட்டத்தைச் செயற்படுத்துவதில் அரசும் தனியார் துறைகளும் ஈடுபட்டுள்ளன.

நமது வெளிநாட்டு முதலீட்டுத் துறையை வலுப்படுத்துவது நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சியின் இன்றியமையாத பகுதியாகும். நம் நாட்டிலிருந்து பெற்றுக்கொள்ளகக்கூடிய முதலீடுகள் குறைவாக இருப்பதால், வெளிநாட்டு முதலீடுகள் நாட்டிற்குள் வர முறையான சட்டங்களும் நவீன நிறுவன கட்டமைப்பும் அவசியம். அந்த நோக்கத்திற்காக, தற்போதுள்ள பல நிறுவனங்களை இணைத்து புதிய பொருளாதார ஆணைக்குழுவை நிறுவுவது எமது எதிர்பார்ப்பாகும்.

மேலும், முதலீட்டுக்கான பழைய சட்டங்களுக்குப் பதிலாக புதிய ஒருங்கிணைந்த சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டில் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு நவீனமயப்படுத்த வேண்டிய பல்வேறு துறைகள் உள்ளன. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தொழில் பயிற்சிக் கல்வி, நகர அபிவிருத்தி, பாதுகாப்புத் துறை, தகவல் தொழில்நுட்பம், வெளிநாட்டு உறவுகள், விநியோகச் சங்கிலிகள், ஏற்றுமதித் தொழில்துறை, தொழிற் படை போன்றவை இவற்றில் அடங்கும். மின்சாரத் துறையின் முழுமையான வளர்ச்சியை இலக்காகக் கொண்டு மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அணுகுமுறை எடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நடவடிக்கைகளின் அடிப்படையில் எமது வெளிநாட்டு உறவுகள் வலையமைப்பை தொடர எதிர்பார்க்கின்றோம். வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்குள் சர்வதேச வர்த்தக நிறுவனம் ஒன்றை நிறுவுவது தொடர்பான ஆரம்பகட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கான புதிய சட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பொருளாதார சீர்திருத்தங்களை நோக்கமாகக் கொண்டு கடந்த இரண்டு ஆண்டுகளில் 30 இற்கும் மேற்பட்ட புதிய சட்டங்கள் மற்றும் சட்டத் திருத்தங்கள் இந்த நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், இது போன்ற பல சட்டமூலங்களை விரைவில் இந்த நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்க்கின்றோம்.

பொருளாதார பரிவர்த்தனை சட்டமூலம், அரச நிதி சட்டமூலம் மற்றும் அரச கடன் முகாமைத்துவ சட்டமூலம் ஆகியவை அவற்றில் முக்கியமானவை.

பொருளாதாரப் பரிவர்த்தனை சட்டமூலமானது இலங்கைப் பொருளாதார ஆணைக்குழு, முதலீட்டு உட்கட்டமைப்பு வசதிகள் கூட்டுத்தாபனம், சர்வதேச வர்த்தக நிறுவனம், தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழு, இலங்கை பொருளாதார மற்றும் வர்த்தக நிறுவனம் ஆகியவற்றை உள்ளடக்கியது. பொருளாதார பரிவர்த்தனை சட்டம், நீண்ட காலத்திற்கு அரசாங்கம் பின்பற்ற வேண்டிய பல நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது.

எதிர்காலத்தில் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும், இந்தப் பொருளாதாரத்தை மீண்டும் அதலபாதாளத்திற்கு இழுத்துச் செல்லாமல் இருக்க இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் தொடரப்பட வேண்டும். எமது நாடு எதிர்நோக்கும் நெருக்கடியைத் தீர்ப்பதற்கும், நாட்டை மீண்டும் இவ்வாறான அவலத்தில் தள்ளாமல் இருப்பதற்கும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நீண்டகால மற்றும் தொடர்ச்சியான வேலைத்திட்டம் அவசியம் என்பதை நான் தொடர்ந்தும் கூறி வந்தேன். நாங்கள் இதுவரை மேற்கொண்ட பொருளாதார சீர்திருத்தங்களுக்கு எதிர்க்கட்சிகள் விமர்சன ரீதியிலான ஆதரவை அளித்துள்ளன.

மறுசீரமைப்பு செயல்முறையைத் தொடர எதிர்காலத்தில் அத்தகைய ஆதரவு தேவை. பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் கடந்த இரண்டு வருடங்களாக அரசு நடைமுறைப்படுத்திய பொருளாதார சீர்திருத்தத் திட்டத்திற்கு மக்கள் ஆதரவளித்துள்ளனர்.

எரிந்து கொண்டிருந்த பொருளாதாரத்தில் இருந்து நிலையான பொருளாதாரத்தை நோக்கிய இந்தப் பயணத்தில் அடைந்த முன்னேற்றத்தால், நாடு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட முன்னேற்றமடைந்துள்ளது. இந்த முன்னேற்றத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாத சில குழுக்கள் நாம் நரகத்தில் ஒரு இடைவேளையைக் கடந்து கொண்டிருக்கிறோம் என்று கேலி செய்கின்றனர்.

ஆம், நாங்கள் பொருளாதார நரகத்தில் இருந்தோம். இப்போது நாம் முறையான திட்டமிடல் மூலம் இந்த நரகத்திலிருந்து வெளியே வருகின்றோம். ஆனால், தொலைநோக்குப் பார்வை இல்லாமல் குறுகிய கால மற்றும் குறுகிய எதிர்பார்ப்புகளை இலக்காகக் கொண்டு தற்போதைய பயணப் பாதையை மாற்றினால், நாம் மீண்டும் நரகத்துக்குள் தள்ளப்படுவோம். அது நடந்தால், நாம் அனைவரும் நீண்ட காலம் நீடிக்கும் மிகவும் துயர்மிகு காலத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இதுவரை நாம் முன்னெடுத்த வேலைத்

தொடர்ச்சி▼

# நரகத்தில் விழுந்த இலங்கையை குறுகிய காலத்தில் மீட்டெடுத்தேன்

தொடர்ச்சி▲

திட்டம் வெற்றியடைவதாக எதிர்தரப்பு அரசியல் குழுக்கள் நாளுக்கு நாள் உறுதிப்படுத்திக்கொண்டிருப்பது நல்ல விடயம். புத்தாண்டின் போது, கூட்டுறவு விற்பனை நிலையங்களில் மக்கள் அதிகமாக திரண்டிருக்கும் படங்களை வெளியிட்டு, கூட்டுறவு சங்கங்களின் வருமானம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக சமூக வலைதளங்களில் வெளியிடப்பட்ட கருத்துக்களைப் பார்த்தோம்.

சில அரசியல் நோக்கங்களுக்காக அந்தப் படங்களும் கருத்துக்களும் பதிவிடப்பட்டன. ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட, மக்கள் நல்ல நிலையில் இருக்கிறார்கள் என்பதையே அது பிரதிபலிக்கின்றது. இதேவே உண்மையாகும். முன்பை விட சற்றேனும் வளமாக உள்ளோம் என்பதையே இது காட்டுகிறது.

இந்த நாட்டிற்கான சவாலான பணியை நான் பொறுப்பேற்றபோது, நான் ஒரு தொங்கு பாலத்தில் நடக்க வேண்டியிருந்தது என்று குறிப்பிட்டேன். அன்றைய காலக்கட்டத்தில் அதைப் பொருட்படுத்தாதவர்களும் இன்று அதை ஒப்புக்கொள்கின்றார்கள். தொங்கு பாலத்தைத் தவிர வேறு வழியில்லை என்பதையே இது காட்டுகின்றது. இதைத் தவிர வேறு வழியில்லை என்றும் இன்று கூறுகின்றார்கள்.

நமது பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேறு வழியில்லை என்பதை மீண்டும் கூறுகின்றேன். இந்த வழியைத் தவிர வேறு எந்த மாற்றுவழியும் இல்லை. இந்தத் திட்டத்தைத் தவிர வேறு எந்தத் திட்டமும் இல்லை. அதனால்தான், இந்தப் பொருளாதாரச் சீர்திருத்தத் திட்டத்தில் பொதுவான உடன்பாடு மற்றும் பொதுவான ஒருமித்த கருத்து தேவை என்று நான் எப்போதும் கூறுகின்றேன்.

அந்த ஒருமித்த கருத்தை இந்த சபையில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் மட்டுமன்றி, மதத் தலைவர்கள், தொழிற் சங்கங்கள், தொழில் வல்லுநர்கள், வர்த்தக சமூகம், அரச சாரா நிறுவனங்கள், பல்வேறு கருத்துக்களைக் கொண்ட தலைவர்கள், சமூகத்தில் செல்வாக்கு செலுத்தக்கூடியவர்கள் என அனைவரும் இந்த பொதுவான ஒருமித்த இணக்கப்பாட்டில் இணைய வேண்டும்.

உடன்பாடு மற்றும் ஒருமித்த கருத்துடன் முன்னேறினால், உலகில் அபிவிருத்தி அடைந்த நாடாக விரைவில் முன்னேற முடியும்.

அப்படியில்லாமல், இந்த இக்கட்டான நேரத்தில் நாட்டை விட்டு, தமது நலன்களை முன்னிறுத்தி செயற்பட்டால் அந்தப் பயணம் பெரும் அழிவின் தொடக்கமாக அமையலாம். அந்த ஆபத்துக்களை உணர்ந்து நாட்டின் நலனுக்காக நீங்கள் அனைவரும் பொதுவான உடன்பாட்டையும் ஒருமித்த கருத்தையும் எட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

நாட்டை மீட்டெடுக்க நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு எதோ ஒரு வகையில் பங்களிப்பதற்கான இந்த வாய்ப்பைத் தவறவிடாதீர்கள். அனைவரும் சேர்ந்து இந்த மலர்த்தட்டில் கைவைப்போம். இன்று நாம் எவ்வாறு செயல்படுகின்றோம் என்பதை வைத்தே எமது எதிர்காலம் தீர்மானிக்கப்படுகின்றது.

நாட்டுக்குத் துரோகம் செய்தவர்கள் என்று முத்திரை குத்திக்கொள்ளப்போகின்றோமா?அல்லது நாட்டை நேசித்த குழுவாக அடையாளப்படுத்தப்படுவோமா?அதுதான் இன்று நாம் எடுக்க வேண்டிய முடிவாகும்." – என்றார்.

# பாடசாலைக்குக் கண்காணிப்புக் கமெரா




(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு விடுத்த வேண்டுகோளை ஏற்று என்.எஸ்.எஞ்ஜினியரிங் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.யூ.எம்.நியாஸ் 'கண்காணிப்புக் கமெரா' தொகுதியைப் பாடசாலைக்கு அன்பளிப்பு செய்துள்ளார்.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ், ஆசிரியர்கள் அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினர், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## டயானா வழக்கின் அதிர்வுகள்

இதுவரை இராஜாங்க அமைச்சராக இருந்த டயானா கமகேயின் எம்.பி. பதவியை ரத்துச் செய்து உயர் நீதிமன்றம் நேற்று வழங்கிய அதிரடித் தீர்ப்பு, தொடர்ந்து பல அதிர்வலைகளை ஏற்படுத்தப் போகின்றது என்றே தோன்றுகின்றது.

டயானா கமகேக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் இரண்டு - ஒன்றாக ப் பிரிந்து முன்னர் தீர்ப்பு வழங்கி நிராகரித்திருந்தது. அந்தத் தீர்ப்பு வழங்கிய முறைமையும் உயர்நீதி மன்றத்தினால் ஒரு பிடி பிடிக்கப் பட்டிருக்கின்றது. அந்த விடயம் சட்ட - நீதித்துறையில் பல தொடர் அதிர்வு களை ஏற்படுத்தும் என்பது நிச்சயம்.

இந்த விவகாரத்தையொட்டி டயானா கமகேக்கு எதிராக எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள், அதன் தொடர் விளைவு கள் என்பன பெரும் பரபரப்பை ஏற் படுத்தலாம் என்றும் நம்பப்படுகிறது.

தற்போதைய உயர்நீதிமன்ற தீர்ப் பின்படி -

டயானா கமகே 2015 இற்குப் பின் இலங்கைப் பிரஜையே அல்லர். பிரிட் டிஷ் பாஸ்போர்ட் பெற்றமையால் தமது இலங்கைப் பிரஜாவுரிமையை இழந்த அவர், அந்த பிரிட்டிஷ் பாஸ்போர்ட் டுடன் இலங்கைக்கு வந்திருக்கின்றார். அப்போது அவருக்கு வழங்கப்பட்ட விசா 2015 ஜூன் 16ஆம் திகதியுடன் காலாவதியாகிவிட்டது.

அதற்குப் பின்னர், தவறான தகவல்களை வழங்கி - தாம் இலங்கைப் பிரஜை எனத் தவறாகக் காட்டி - இலங்கைப் பாஸ் போர்ட்டையும், அதனைப் பயன் படுத்தி இலங்கையின் இராஜதந்திர பாஸ்போர்ட்டையும் அவர் பெற்றிருக் கின்றார். எனவே 2015 ஜூன் 16ஆம் திகதிக்கு பின்னர் இலங்கைப் பிரஜா வுரிமை இல்லாமல், இலங்கையில் முறை யான விசா அனுமதி பெறாமல், கடந்த 9 வருடங்களாகத் தவறான தகவல்களை வழங்கி, வெளிநாட்டுப் பிரஜையான அவர் இலங்கையில் தங்கியிருந்தமை யோடு, இராஜாங்க அமைச்சர் பதவி யையும் வகித்திருக்கின்றார் என்பதுதான் அர்த்தம்.

அந்த விவகாரம் கவனத்தில் கொண்டு வரப்பட்டும், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முறையான நடவடிக்கை எடுக்கவில்லை என உயர்நீதிமன்றம் தன் தீர்ப்பில் ஒரு பிடி பிடித்துருப்ப தால், இனி சி.ஐ.டியினர் இவ்விவகாரத் தில் இரட்டை வேகத்தில் செயற்பட வாய்ப்பு உண்டு என எதிர்பார்க்கப்படுகி றது.

இலங்கைப் பிரஜாவுரிமை உள்ளது எனத் தவறான தகவல்களை வழங்கி, இலங்கைப் பாஸ்போர்ட் பெற்றமை, விசா அனுமதியில்லாமல் நாட்டில் தங்கி இருந்தமை, தவறான தகவல்களை முன்வைத்து இராஜதந்திர பாஸ்போர்ட் பெற்றமை உட்பட்ட காரணங்களை முன்வைத்து அவர் கைது செய்யப்படக் கூடிய நிலைமை இருப்பதாகத் தெரி கின்றது.

இவ்விடயம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று, குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் முறையிட்டு, உரிய நடவடிக்கை எடுக்க குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் தயாராகி வருகின்றது எனவும் கூறப்படு கிறது.

இலங்கைப் பிரஜையாக இல்லாம லேயே இதுவரை காலமும் டயானா கமகே பெற்ற நாடாளுமன்ற வேதனம், இராஜாங்க அமைச்சருக்கான ஊதியம், வசதிகள், கொடுப்பனவுகள் போன்ற வற்றை அவரிடம் இருந்து மீள அறவி டும் நடவடிக்கை குறித்தும் ஆலோசிக் கப்படுவதாகத் தெரிகின்றது.

இது ஒரு புறம், இருக்க டயானா கமகே செயலாளராக இருந்த கட்சியின் சார்பி லேயே ஐக்கிய மக்கள் சக்தி கடந்த பொதுத் தேர்தலில் களமிறங்கியது. டயானா கமகே உட்படக் கட்சியின் நிர்வாகிகள் பின்னர் மாற்றப்பட்டனரா யினும், கடந்த தேர்தல் சமயத்தில் - 2020இல் - டயானா கமகேயே அக்கட்சி யின் பொதுச்செயலாளராக இருந்தார்.

அச்சமயத்தில் அவர் இலங்கைப் பிரஜை அல்லர் என்று உயர்நீதிமன்றம் இப்போது தீர்மானித்திருப்பதால் - தீர்ப்பளித்திருப்பதால் - அவர் பொதுச் செயலாளராக ஒப்பமிட்ட கட்சியின் சார்பில் இப்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களின் தெரிவும் செல்லுபடியா குமா என்ற புதிய சர்ச்சையும் உருவாகி இருக்கின்றது.

இவ்விடயத்தில் நீதிமன்றத்தில் வழக் குத் தொடர்ந்து, அந்த வழக்கு விசார ணைக்கு ஏற்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு, தீர்ப்பு வரும் வரையில் தற்போதைய நாடாளுமன்றம் இயங்கிக் கொண்டி ருக்குமா என்ற கேள்வி இருப்பதும் கூட கவனத்துக்குரியதுதான்.

# மனித உரிமைகளைப் பாதுகாக்க மக்கள் குரல் கொடுக்க வேண்டும்

## சட்டத்தரணி அம்பிகா சிறிதரன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் அதனைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும் மக்கள் குரல் கொடுக்க வேண்டும் என்பதே சட்டத்துக்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் நோக்கம்.

இவ்வாறு நிலையத்தின் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான அம்பிகா சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை சட்டத்துக்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் அனுசரணையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஆவணங்களை பெறுவதற்கான இலவச நடமாடும் சேவை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்படி அவர் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,



மக்களை அணி திரட்டி மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்பதே எமது இலக்கு. அதற்காக பொதுமக்கள் மற்றும் குறிப்பாக பெண்களை வலுப்படுத்தும் செயற்பாடுகளில் நீண்ட காலமாக சட்டத்துக்கும் மனித உரிமைகளுக்குமான நிலையம் ஈடுபட்டு வருகின்றது.

மக்களுக்கு இலவச சட்ட உதவி வழங்கல்,விழிப்புணர்வு நிகழ்வுகளை மேற்கொள்ளல் உள்ளிட்ட செயற்பாடுகள் எம்மால் முன்னெடுக்கப்படுகின்றன.

சட்டத்தால் வழங்கப்படுகின்ற உரிமைகளை முறையாக அனுபவிக்க வேண்டுமானால் ஆவணங்கள் மிக அவசியமானவை. அரசால் நடைமுறைப்படுத்தப்படும் நலன்புரி மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டங்களைப் பெற ஆவணங்கள் அவசியமானவை. சட்டம் வழங்கும் நலன்களை பெற ஆவணங்களே சிறந்த சான்று.

பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவு மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியன மிக அவசியமான ஆவணங்கள்.

இவ்வாறான ஆவணங்களை இதுவரை பெற்றிராத மக்களுக்கு அதனைப் பெற்றுக் கொடுத்து நலன்களை கிடைக்கச் செய்வதற்காகவே பிரதேச செயலகங்கள் ஊடாக நடமாடும் சேவைகளை முன்னெடுத்து வருகிறோம். - என்றார்.

# வவுனியாவில் பறிபோகும் தமிழர் நிலம் திரைமறைவில் இடம்பெறும் காய் நகர்வு!

## வெளியானது அதிர்ச்சித் தகவல்!!

வவுனியாவில் இராஜாங்க அமைச்சர் ஒருவரின் துணையுடன் தமிழ் கிராமங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்படும் நிகழ்வு தற்போது திரை மறைவில் அரங்கேறி வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கூழாங்குளம் பகுதியில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் காணிகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு பள்ளிவாசல் அமைப்பதற்கான முயற்சிகள் இராஜாங்க அமைச்சர் ஒருவரின் துணையுடன் அரங்கேறி வருகிறது.

ஆக்கிரமிப்புச் செய்யப்படும் இந்தக் கிராமம் அமைந்துள்ள பிராமணாலங்குளம் கிராமசேவகர் பிரிவானது தொன்று தொட்டு வந்த ஒரு தமிழ் கிராமமாகும். இந்தப் பிரிவில் மன்னார் வவுனியா வீதியில் அமைந்துள்ள ஒரு கிராமமே கூழாங்குளமாகும்.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் சுமார் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுடன் காணப்பட்ட இந்தக் கிராமம் பாரிய இடம்பெயர்வுகளின் பின்னர், வெறும் 30 குடும்பங்களுடன் காணப்படுகிறது. இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட குடும்பத்தினர் தற்போது இந்திய முகாம்களில் உள்ளனர்.

இந்த நிலையில்தான் இந்தக் கிராமத்தின் மன்னார் வவுனியா வீதியை அண்டிய பெரும்பாலான நிலப்பகுதிகள் அருகில் உள்ள கிராம சேவகர் பிரிவு மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் உள்ள பொதுக் காணி ஒன்றும் இராஜாங்க அமைச்சரின் துணையுடன் ஆக்கிரமிக்கப்பட்டு பள்ளிவாசல் கட்டுவதற்கு உரிய வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இன்றுவரை தமிழ் மக்கள் தவிர்ந்த ஏனைய சகோதர மக்கள் வாழ்ந்திராத இத் தமிழர் கிராமத்தின் பெரும்பாலான நிலங்கள் அருகில் உள்ள மக்களுக்கு முறையற்ற வகையில் காணி அனுமதிப் பத்திரங்கள், வெளிப்படுத்தல் உறுதிகள் அடாத்து காணி மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்பதை அயல்கிராமத்தின் பள்ளிவாசல் கடிதம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தியாவில் இருந்து ஒரு சில குடும்பங்கள் மீளத் திரும்பிய நிலையில் இந்த மக்களுக்கான நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு ஆலயங்கள் அழிக்கப்பட்டு பள்ளிவாசல்கள் கட்டும் நடவடிக்கை எடுப்பது நாடு திரும்பும் மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கையில் தடையை ஏற்படுத்தியுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எல்லை நிர்ணயம் மூலம் இந்தக் கிராமம் முற்றுமுழுதான தமிழர் வட்டாரத்தில் உள்வாங்கப்பட்டிருந்த ஒரு கிராமமாகும். ஆயினும் கடந்த சில வருடங்களில் முறையற்றவகையில் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் பக்கசார்புடைய இன ரீதியான சிந்தனை காணி நடவடிக்கையில் குறித்த தேர்தல் வட்டாரத்தில் தமிழ் மக்களை சிறுபாண்மை இனமாக மாற்றுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

முறையற்ற அரசியல் தலையீடு இனரீதியான பக்கசார்பான பிரதேச நிர்வாகம் போன்றவற்றால் பாரம்பரிய தமிழ் கிராமம் தனது மக்களின் காணிகளை இழந்துள்ளதுடன் பொதுக் காணியை பயன்படுத்த முடியாத அளவுக்கு அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகியுள்ளது.

ஆலயங்கள் இருந்த இடத்தில் பள்ளிவாசல்கள் அமைக்கும் நடவடிக்கை எடுப்பது என்பது வேண்டுமென்றே தமிழர் அடையாளத்தை சிதைப்பது போன்றுள்ளது. இன்னும் ஒருசில வருடத்தில் இக்கிராமம் அமைந்துள்ள உள்ளூராட்சி வட்டாரமானது தனது தமிழர் பிரதிநிதித்துவத்தை இழக்கும் என்பதில் எவ்வித மாற்றுகருத்தும் கிடையாது.

இவ்விடயம் தொடர்பில் ஒரு நடுநிலையான விசாரணை நடைபெற்று தங்களுடைய நிலமும் வாழ்வும் பாதுகாக்கபடவேண்டும் என்று இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சீதையம்மன் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இந்தியா புனித சரயு நதி தீர்த்தம் ஊர்வலம்

(அஷ்ரப் ஏ சமத் )

ஸ்ரீசீதையம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இந்தியாவின் புனித சரயு நதியிலிருந்து எடுத்துவரப்பட்ட தீர்த்த ஊர்வலம் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை, வெள்ளவத்தை மயூரபதி ஆலயத்தில் காலை பூஜையுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பூஜை ஆசீர்வாத நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், இந்தியத் தூதர் ஆகியோர் கலந்து கொள்வர்.




அத்துடன் இந்தியாவில் இருந்து ரவிசங்கர் குருக்கள் இலங்கை வருகின்றார். அவருடன் 2000 இற்கும் மேற்பட்ட பக்தர்கள், நேபோல் இந்திய பக்தர்களும் வருகை தர உள்ளனர் என்று ஆலய தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வி. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஆலய மஹா கும்பாபிஷேக விடயமாக விசேட ஊடக மாநாடு வெள்ளவத்தை மயூரபதி ஆலயத்தில் நேற்று முன்தினம் (07) நடைபெற்றது. இந்த ஊடக மாநாட்டில் கலந்து கொண்டு வி. இராதாகிருஷ்ணன் மேலும் தெரிவிக்கையில்,

இந்த மங்களகரமான குரோதி ஞாயிறுக்கிழமை 19 ஆம் திகதி காலை 09 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் ராம பிரானின் அருளுடன் சீதாபிராட்டியின் ஆசியுடன் நடைபெறவுள்ளது. 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிரியாரம்பம் காலை 8 மணிக்கும் முதல் கிரியைகள் இடம்பெற்று மாலை கடகஸ்தபனா யாக பூஜை, ஹோமம், ஸ்துபி தீப யந்திர பம்பஸ்தாபனம் என்பன நடைபெறும்.

18 ஆம் திகதி எண்ணெய்க்காப்பு இடம்பெறும். அன்றை தினம் அயோத்தி மாநகரின் புனித சரயு நதியிலிருந்து புனித தீர்தக் கலசங்களுடன் காலை 07.00 மணிககு பால்குடா பவனியம் சுவாமி ஊர்வலமும் நுவரெலியா நகரத்திலிருந்து ஸ்ரீ சீதைம்மன் ஆலயத்தை நோக்கிப் புறப்படும்.

அதேதினம் கும்பாபிஷேக ஊர்வலம் புறக்கோட்டை, செட்டியார் தெரு, அவிசாவளை, ஊடாக யட்டியாந்தோட்டை, கினகந்தேனை, ஹட்டன், கொட்டக்கலை, தலவாக்கலை, பூண்டுலோயா, தவலந்தன்மை சந்தி ஊடாக இறம்போடை ஸ்ரீ ஹனுமான் ஆலயத்தைச் சென்றடைந்து நிறைவடையும்.

18 ஆம் திகதி சனிக்கிழமை, அன்று காலை 7 மணிக்கு இற்போடை, ஹனுமான் ஆலயத்தில் விசேட பூஜைகளுடன் ஊர்வலம் ஆரம்பமாகி லபுக்கலை நுவரெலியா ஊடாக ஸ்ரீசீதையம்மன் ஆலயத்தைச் சென்றடையும்.- என்றார்.






## இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளில்

# சிதறடிக்கப்பட்ட சமூகமாக்கப்படவுள்ள அபாய நிலையில் மலையகத் தமிழர்!

## ஆய்வாளர் மயில்வாகனம் திலகராஜ் ஆரூடம்!!

பெருந்தோட்டத்துறை கட்டமைப்பை மாற்றி அமைப்பது, உயிர்பல்வகைத் தன்மையைக் காரணம் காட்டி காடாக்கல் செய்வது, காணி, வீட்டு உரிமைகளை வழங்காது மக்களை வெளியேறச் செய்வது, கட்டாயக் கருத்தடை மூலம் பிறப்பு வீதத்தைக் கட்டுப்படுத்துவது எனும் பல்வேறு திட்டமிட்ட செயற்பாடுகள் எதிர்வரும் 25 ஆண்டுகளில் மலையகத் தமிழ் இனத்தைச் சிதறுண்ட சமூகமாக மாற்றிவிடும் அபாயத்தை ஏற்படுத்தும்.

எழுத்தாளரும் ஆய்வாளரும் அரசியலாளருமான மயில்வாகம் திலகராஜா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மலையக மகளிர் அபிவிருத்தி மன்றத்தின் மலையகப் பெண்களை முன்னிறுத்திய கருத்தரங்கு கொழும்புத் தமிழச் சங்கத்தில் மீனாட்சியம்மாள் அரங்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. நிகழ்வில் கலந்து கொண்டு நான்கு ஆய்வுரைகளைத் தொகுத்து கருத்துரை வழங்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மலையகம் 200 என்று பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நிலையிலேயே மலையகப் பெண்களை முன்னிறுத்திய ஒரு கருத்தரங்கை நடத்துவதற்கு தமது மன்றம் தீர்மானித்தது. எதிர்வரும் ஐந்தாண்டு காலத்தில் நாங்கள் என்னவாக இருக்கப் போகிறோம்? அதற்காக நாங்கள் வகுத்துக் கொள்ளக் கூடிய கொள்கை என்ன? என்பதைக் கண்டடைவதே கருத்தரங்கின் முக்கிய நோக்கம் என்று சண்முகப்பிரியா கார்த்திகேசு தலைமையுரையில் தெரிவித்தார்.

'மலையகப் பெண்களும் சுய தொழில் முயற்சியும்' எனும் தலைப்பில் ஆய்வுரை வழங்கிய பேராசிரியர் ராஜலக்ஸ்மி சோனதிராஜா கரத்துத் தெரிவிக்கையில்,

"நாட்டிலும் மலையகத்திலும் பெண்களே அதிகளவு வீதாசாரத்தில் பொருளாதார பங்களிப்பை வழங்கி வருகின்றனர். குறிப்பாக மலையகப் பெருந்தோட்டங்களில் பெண்களின் சமூகப் பொருளாதார பங்களிப்பு உயர்வாக உள்ளது.

ஆனால் பெருந்தோட்டக் கைத்தொழில் வீழ்ச்சி அடைந்து கொண்டு செல்வதால் பெண்கள் வேறு தொழில்களான வெளிநாட்டு வேலை, வீட்டு வேலைக்கு செல்லுதல், ஆடைக் கைத்தொழில், கடைகளில் வேலை என துறை மாறினாலும் எல்லா இடங்களிலும் கூலி வாங்கும் வேலையாள்களாகவே வாழ நேர்ந்துள்ளது.



இவர்களுக்கான சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குவதில் மலையகப் பகுதிகளில் நிலவும் அடிப்படைக் கட்டுமானங்கள் பெரும் சிக்கலாக உள்ளது. பாதையமைப்பு, சுகதாரம், மின்சாரம் என எல்லாவற்றிலும் சிக்கல் உள்ளது. கடந்த இரண்டு தசாப்தங்களில் தோட்டங்களைவிட்டு வெளியெறும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது. பதுளையில் ஒரு லட்சத்துக்கு மேல் மலையக மக்கள் வாழ்ந்த தோட்டம் ஒன்றில் இப்போது 2 குடும்பங்களே வாழ்கின்றனர். இங்கே காணிகள் பகிரந்தளிக்கப்படுமானால் மலையகததவர்கள் அல்லாதவர்களே அந்த வாய்ப்பைப் பெறுவர்"- எனத் தெரவித்தார்.

ஓய்வுநிலை மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் அருந்ததி சத்தியேந்திரா 'மலையகப் பெண் ஆசிரியர்கள் தொடர்பான நிலைப்பாடு' எனும் தலைப்பில் ஆற்றிய உரையில்,

"மலையகப் பெண் ஆசிரியர் எதிர்நோக்கும் பல்வேறு சவால்கள் முன்வைக்கப்பட்டதுடன் பின் காலனித்துவ காலத்தில் மலையகக் கல்வியில் ஏற்படுத்தப்பட்ட முப்பது ஆண்டு கால பின்னடைவைச் சரிசெய்வதற்கு ஆசிரியர்களே பெரும் பங்களிப்பைச் செய்ய வேண்டியவர்களாக உள்ளனர் எனவும் குறிப்பிட்டார்.

'மலையகப் பெண்களின் கல்வி நிலை இன்றும்நாளையும்'எனும்தலைப்பில் தேசிய கல்வி நிறுவகத்தின் வருகை தரு விரிவுரையாளர் பிரமிளா பிரதீபன் உரையாற்றுகையில்,

"கன்னங்கர கல்வி ஆணைக் குழுவில் மலையகப் பெருந்தோட்டச் சமூகம் உள்வாங்கப்படாது விட்டதால் ஏற்பட்ட இடைவெளி இன்று பல்வேறு வடிவங்களில் அங்கே கல்விசார் இடைவெளிகளைத் தோற்றுவித்துள்ளது. முன்பள்ளி கல்வியில் ஆசிரியர்களாக பெண்களே அதிகம் உள்ள நிலையில் அதில் எதிர்கொள்ள வேண்டிய சவால்களைத் தனியாக நோக்க வேண்டியுள்ளது."- எனக் குறிப்பிட்டார்.

'மலையகப் பெருந்தோட்டப் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள்' எனும் தலைப்பில் சிவில் சமூகச் செயற்பாட்டாளர் கமலேஷ்வரி லட்சுமணன் உரையாற்றுகையில்,

மலையகப் பெருந்தோட்டப் பெண்கள் எதிர்நோக்கும் நீண்ட பட்டியல் ஒன்றை முன்வைத்ததுடன் அவற்றில் புதிய வகையான பிரச்சினைகளை தொட்டுக்காட்டினார்.

உயிரியல் ஆபத்துகளாக அட்டை, பாம்புக்கடி முதலானவற்றிடமிருந்தும் சிறுத்தைகளிடம் இருந்தும் ஆபத்துக்களை எதிர் கொள்பவர்களாகவும் பெண்கள் உள்ளனர்.

ஆனால் இலங்கையில் ஏனைய மக்கள் குழாத்துடன் சிறுத்தைகள் சுமூகாக நடந்து கொள்கையில் மலையகப் பெருந்தோட்டப் பகுதி மக்கள் சிறுத்தைகளைத் தாக்குவதால்தான் அவை அச்சுறுத்தல்களாக மாறுகின்றன என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளமை ஆச்சரியமளிக்கின்றது. உயிர் பல்வகைத் தன்மை கோட்பாட்டை நடைமுறைப் படுத்தப்படுவதாக கூறி மறைமுக நிகழ்ச்சி நிரலாக பெருந்தோட்டங்கள் மூடப்படும் அபாயம் நிலவுகிறது என்று தெரிவித்தார்.



# தமிழரின் பாரம்பரிய தற்காப்பு கலைகளை அழியவிடாமல் காக்கும் சிலம்பம் போட்டி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சிவலீமன் சிலம்பம் சம்மேளனமும், உலக சிலம்பன் விளையாட்டுக் கழகமும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த சர்வதேச சிலம்பம் போட்டி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இலங்கை, இந்தியா, லண்டன் மலேசியா, டுபாய் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கை சிவலீமன் சங்கத்தின் தலைவர் யசுதரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வின் பரிசளிப்பு நிகழ்வில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.







# குடும்ப சுகாதாரம் தொடர்பாக விழிப்புணர்வுச் செயற்றிட்டம்!

(த.சுபேசன்)

நல்லூர் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலைய மாணவர்களுக்கு குடும்ப சுகாதாரம் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மகப்பேற்று மற்றும் பெண்ணியல் மருத்துவத்துறையும் சமூக மருத்துவ துறையும் இணைந்து செயற்படுத்தி வரும் இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பான செயற்றிட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பயிற்றுவிக்கப்பட்ட சமூக சுகாதார உதவியாளர்களால் விழிப்புணர்வுச் செயலமர்வு நடத்தப்பட்டது.

இதன்போது இனப்பெருக்க சுகாதாரம் , இள வயதுத் திருமணம், பால்நிலை வன்முறை மற்றும் குழந்தைப் பேற்றுக்குப் பின்னரான சுகாதாரம் போன்ற விடயங்கள் தொடர்பாகத் தெளிவூட்டப்பட்டது.

சர்வதேச மருத்துவ நிறுவனமான ஐ.எம்.எச்.ஓ. நிறுவனத்தின் நிதி அனுசரணையில் மேற்படி விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் கடந்த ஒன்றரை வருட காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# வெப்பம் அதிகரிப்பின் எதிரொலி மக்கள் நடமாட்டம் பகலில் குறைவு!

**(பாறுக் ஷிஹான்)**

கடும் ஊஷ்ணம் காரணமாக அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் பொது மக்களின் நடமாட்டம் பகல் வேளையில் குறைவடைந்துள்ளதுடன் இரவு வேளை அதிகரித்து காணப்படுகின்றது.

அடிக்கடி ஏற்படும் காலநிலை மாற்றம் காரணமாகக் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் சீரற்ற இயல்பு நிலையுடன் பொது மக்களின் நடமாட்டம் குறைவாகவே காணப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, சவளக்கடை, சம்மாந்துறை, மத்திய முகாம், பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் உணவகங்கள், புடைவைக் கடைகள், வீதியோர வியாபாரங்கள் போன்றவை வழமை போன்று இயங்கிய போதிலும் மக்கள் நடமாட்டம் குறைவாகவே காணப்படுகிறது.

அரச தனியார் போக்குவரத்து குறிப்பிட்ட தூரத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையிலும் மட்டுப்படுத்த மட்டில் இடம்பெற்றது. அதில் பயணம் செய்கின்ற பொதுமக்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டனர்.

சில இடங்களில் ˙களின் வருகை இன்மையால் வியாபார நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு, தாழங்குடா கல்வியல் கல்லூரியில் இரத்ததான முகாம்



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மட்டக்களப்பு, தாழங்குடா கல்வியல் கல்லூரியில் கல்விக்கும் தர மேம்பாட்டுக்கும் பொறுப்பான உப பீடாதிபதி திருமதி மணிவண்ணன் தலைமையில் இரத்ததான முகாமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இதில் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் குருதிக் கொடையில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த இரத்ததான முகாம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.




# கற்பிட்டியில் சிறுவர் சந்தை!

**(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)**

கற்பிட்டி ஜன்னத்துல் அஸாபிர் இஸ்லாமிய பாலர் பாடசாலையின் வருடாந்த சிறுவர் சந்தை இந்த வருடமும் பாடசாலையின் அதிபர் எம்.ஜே. என் பாஹிமா தலைமையில் நேற்று (08) பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் புத்தளம் மாவட்ட உளவளத்துணை உத்தியோகத்தரும் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் பாலர் பாடசாலைகளுக்கான பொறுப்பு உத்தியோகத்தருமான எச். எம் நிப்ராஸ் , கற்பிட்டி புதுப்பள்ளிவாசலின் பேஷ் இமாம் மௌலவி மிக்தாத் மற்றும் கற்பிட்டியின் பிரபல தொழிலதிபரும் சமூக சேவையாளருமான ஏ.ஆர். எம் முஸம்மில் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.

சிறுவர்களின் அறிவு ஆற்றலை மேம்படுத்தி செயற்பாட்டு திறன் மிக்கதாக கொண்டு வரும் நோக்கோடு வியாபாரம் மற்றும் பொருளாதாரம் ரீதியாக சிறார்களை செயற்பட தூண்டுதலை நோக்காக கொண்டு இச் சிறுவர் சந்தை வருடா வருடம் கற்பிட்டி ஜன்னத்துல் அஸாபிர் இஸ்லாமிய பாலர் பாடசாலையில் நடைபெற்று வருகிறது. இதற்கான பூரண ஒத்துழைப்புக்களை பெற்றோர்களுடன் இணைந்து பாடசாலையின் ஆசிரியர்களான ஏ.சீ யஸினத் பானு, எம்.ஐ. ஆகிலா பானு, எம்.எப். இமாரா, எம்.ஏ.எப். ஹனா, எம்.ஆர்.எப். றபா ஆகியோர் வழங்கியுள்ளனர்.





# புத்தளம் வைத்தியசாலையின் சுவர்களில் ஓவியங்கள்

**( கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)**

நோயாளர்களாக வருகை தரும் சிறார்களின் மகிழ்ச்சியைக் கருத்தில் கொண்டு புத்தளம் ஆதார வைத்தியசாலையின் உட்புற சுவற்றில் அழகிய வர்ண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

புத்தளம் ஆதார வைத்தியசாலையின் சிறுவர் விடுதிகளுக்குப் பொறுப்பான டாக்டர் சுஜித் மற்றும் டாக்டர் சனுாசியா ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்த ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

சமூக ஆர்வலர் முஹம்மட் சாமிலின் முயற்சியால் புத்தளம் வலய கல்வி பணிமனையின் சித்திரப்பாட ஆசிரிய ஆலோசகர் கலாநிதி எம்.எம். முஹம்மது மற்றும் அவரது மாணவர் அஷ்ஷெய்க் முஹம்மது ஜப்ரீஸ் ஆகியோரது ஒத்துழைப்போடும் புத்தளம் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் முன்னால் நகர சபை உறுப்பினர் ரனீஸ் பதியுதீனின் பங்குபற்றுதலோடும் இந்த ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.




# வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வு யாழ். நகரில் இன்று நடைபவனி

(எஸ்.நிதர்ஸன்)

வீதிப்பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக இன்று (09) வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் வேம்படிச் சந்தியிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலை வீதியூடாக - காங்கேசன் துறை வீதி - சத்திரச் சந்திவரை வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்றது.

வீதியில் காணப்படும் இடர்பாடுகளுடைய இடங்களை அடையாளங் காணல், வீதிப் பாதுகாப்பு மற்றும் வாகன நடைமுறைகளைப் பின்பற்றல், பரிசோதனை போன்ற செயற்பாடுகள் இதன்போது நடைபெற்றன.

இந்தச் செயற்பாட்டைத் தொடர்ச்சியாக ஏனைய பகுதிகளில் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலாளர், வடக்கு மாகாண மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஆணையாளர், மோட்டார் வாகன பரீட்சகர்கள், அதிகாரிகள், யாழ்ப்பாண பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், போக்குவரத்துப் பொலிஸார், வைத்தியர்கள், மாநகர சபை ஆணையாளர் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர்.











### காங்கிரஸுக்கு பணம் கொடுத்தார்களா என்பதை விசாரிக்க

# அதானி, அம்பானி இருவரின் வீட்டுக்கும் அமலாக்கத்துறையினரை அனுப்புங்கள்!

### பிரதமர் மோடிக்கு ராகுல் காந்தி பதிலடி



புதுடெல்லி,மே09

காங்கிரஸ் கட்சிக்கு வேன் நிறைய பணம் கொடுத்தார்களா? என்பதை விசாரிக்க அதானி, அம்பானி வீட்டுக்கு அமலாக்கத்துறையை அனுப்புமாறு பிரதமர் மோடிக்கு ராகுல் காந்தி பதிலடி கொடுத்துள்ளார்.

நாட்டின் பிரபல தொழிலதிபர்களான அதானி, அம்பானி குறித்து வசைபாடி வந்த காங்கிரஸும், ராகுல் காந்தியும், தற்போது அதை நிறுத்தி விட்டனர் எனப் பிரதமர் மோடி குற்றம் சாட்டினார். அவர்களிடம் இருந்து வான் நிறைய கட்டுக்கட்டாக பணம் காங்கிரஸ் பெற்றுள்ளதா என்பதை ராகுல் காந்தி தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பிரதமரின் இந்த உரைக்கு ராகுல் காந்தி நேற்றுப் பதிலடி கொடுத்துள்ளார். இது தொடர்பாக வீடியோ செய்தி ஒன்றை வெளியிட்டுள்ள ராகுல் காந்தி, பிரதமர் தனது தனிப்பட்ட அனுபவத்தை கூறியிருக்கின்றார் எனக் கிண்டல் செய்துள்ளார்.

"பிரதமர் மோடி இந்த இரண்டு தொழிலதிபர்களுக்கு (அதானி, அம்பானி) கொடுத்த பணத்தை, காங்கிரஸ் கட்சி வாக்குறுதியளித்த பல்வேறு திட்டங்கள் மூலம் நாட்டு மக்களுக்கு அதே தொகையை வழங்கும். பா.ஜனதாவின் இந்த வான் ஊழலின் டிரைவர் யார்? உதவியாளர் யார்? என் பதை நாடறியும்" என்றும் ராகுல் காந்திகூறினார்.

# வாரணாசியில் 14 ஆம் திகதி மோடி பிரமாண்டப் பேரணி!

நாடாளுமன்றத் தேர்தலில் உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் போட்டியிடும் பிரதமர் நரேந்திர மோடி, மே 14 ஆம் திகதி கடைசி நாளில் வேட்புமனுத் தாக்கல் செய்ய உள்ளார்.

இதையொட்டி பா.ஜ.க. மற்றும் கூட்டணி கட்சி தலைவர்களுடன் பிரம்மாண்ட ஊர்வலம் நடைபெற உள்ளது. நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் 7 கட்டங்களாக நடைபெறுகிறது. இதில் கிழக்கு உத்தரப் பிரதேசத்தில் உள்ள வாரணாசி உள்ளிட்ட 13 தொகுதிகளுக்குக் கடைசிக் கட்டமாகத் தேர்தல் நடைபெறுகிறது.

வாரணாசி எம்.பியாக இரண்டாவது முறையாக தொடரும் பிரதமர் நரேந்திர மோடி, இங்கு மூன்றாவது முறையாகப் போட்டியிடுகிறார்.

வாரணாசியில் நேற்று தொடங்கிய வேட்புமனு தாக்கல் மே 14 ஆம் திகதி முடிவடைகிறது. இந்நிலையில் இங்கு கடைசி நாளில் வேட்புமனுத் தாக்கல் செய்ய பிரதமர் நரேந்திர மோடி திட்டமிட்டுள்ளார்.

இதையொட்டி இதற்கு முதல் நாளில் இருந்தே வாரணாசியில் பிரம்மாண்ட ஊர்வலங்கள் நடைபெற உள்ளன.



உத்தரபிரதேசத்தில் புனித நகரமான வாரணாசியின் மால்தஹியாவில் உள்ள சர்தார் வல்லபாய் படேல் சிலைக்கு மாலை அணிவித்த பிறகு பிரதமர் மோடி வேட்புமனு தாக்கல் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

வரும் 14 ஆம் திகதியிலும் அதே போல் படேல் சிலைக்கு பிரதமர் மோடி மாலை அணிவிக்க உள்ளார். இதற்கு ஒருநாள் முன்னதாக மே 13 இல் பிரதமர் மோடி வாரணாசி செல்ல உள்ளார். அதே நாளில் அவரது ஹறோடு ஷோ' வாரணாசியில் நடைபெற உள்ளது.

பிரதமர் தனது வேட்புமனுவை வாரணாசி தேர்தல் அதிகாரியிடம் சமர்ப்பிக்க உள்ளார். இப்பதவியில் மாவட்ட ஆட்சியரான தமிழ்நாட்டை சேர்ந்த எஸ்.ராஜலிங்கம் உள்ளார். வாரணாசியுடன் சேர்த்து உத்தர பிரதேசத்தின் 13 தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு ஜூன் 01 இல் நடைபெற உள்ளது. இதன் மூன்றாவது நாளான ஜூன் 4 இல் நாடு முழுவதிலுமான தேர்தல் முடிவுகள் வெளியாக உள்ளன.



# ஆப்கானில் கஞ்சாச் செடிகளை அழிக்க சென்ற வீரர்கள் மீது வெடிகுண்டு தாக்குதல்; 3 பேர் பலி

காபூல்,மே 09

ஆப்கானிஸ்தானில் படாக்சான் மாகாணத்தில் பைசாபாத் நகரில் பாதுகாப்பு படையினரை ஏற்றி கொண்டு வாகனம் ஒன்று சென்றது. இந்நிலையில், திடீரென அந்த வாகனம் மீது வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில், 3 பேர் உயிரிழந்தனர். 5 பேர் காயமடைந்தனர். இதுபற்றி தலிபான்களின் உள்துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் அப்துல் மதின் குவானி கூறும்போது –

மோட்டார் சைக்கிள் ஒன்றில் வெடி குண்டுகள் வைக்கப்பட்டு இருந்தன. அது வெடித்ததில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

கஞ்சா செடிகளை அழிப்பதற்காக அவர்கள் சென்றபோது, கண்ணி வெடிகள் வெடிக்கச் செய்யப்பட்டுள்ளன எனக் கூறியுள்ளார். இந்த பகுதியில் தலீபான்கள் பாதுகாப்பை பலப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என குடிமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த தாக்குதலால், பெண்கள் மற்றும் குழந்தைகள் என அனைவரும் பயந்து போயுள்ளனர். நாங்கள் கவலை அடைந்திருக்கிறோம். தலீபான்களுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்குகிறோம். இந்த சம்பவம் மீண்டும் நடைபெறாமல் இருக்கும் வகையில், அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். – எனக் கூறியுள்ளனர்.

இந்த வெடிகுண்டு தாக்குதல் சம்பவத்திற்கு எந்த தனிநபரோ அல்லது குழுவோ பொறுப்பேற்கவில்லை.

# வீட்டு காவலில் இருந்து சிறைக்கு இம்ரான் கானின் மனைவி மாற்றம்

கராச்சி,மே 09

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், பல்வேறு ஊழல் வழக்குகளில் கைது செய்யப்பட்டு உள்ளார். இந்நிலையில், இஸ்லாமிய நடைமுறைக்கு எதிரான திருமணம் செய்தது தொடர்பான வழக்கில் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி பூஸ்ரா பீபிக்கு தலா 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து பாகிஸ்தான் நீதிமன்றன் தீர்ப்பு வழங்கியது.

இம்ரான் கான் மனைவி, வீட்டு சிறையில் வைக்கப்பட்டார். எனினும், வீட்டில் கெட்டு போன உணவை வழங்கினர் என பீபி குற்றச்சாட்டு கூறிய மையுடன், பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு தன்னை சிறைக்கு கொண்டு செல்லும்படி அவர் கேட்டு கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, பாகிஸ்தானில் உள்ள நீதிமன்றம் ஒன்று அவருடைய கோரிக்கையை ஏற்று சிறைக்கு செல்ல



ஒப்புதல் அளித்துள்ளது. இதனை அவருடைய வழக்கறிஞர் கூறியுள்ளார். இதனால், வீட்டு காவலில் வைக்கும்படி அரசு உத்தரவிட்டதற்கு பதிலாக அவர் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இதன்படி, ராவல்பிண்டியில் உள்ள அடியாலா சிறைக்கு அவர் மாற்றப்பட்டுள்ளார். இந்தச் சிறையிலேயே இம்ரான் கான் 14 வருட சிறை தண்டனையை முன்னிட்டு அடைக்கப்பட்டு இருக்கிறார்.

எனினும், கெட்டு போன உணவை அதிகாரிகள் வழங்கினர் என்ற குற்றச்சாட்டை அவர்கள் மறுத்துள்ளனர்.

கனடா முரசு

பக்கங்கள் 05

வியாழக்கிழமை 09/05/2024

## பல்கலைக்கழக வளாகங்களில் யூத மாணவர்கள் பீதி நிலையில்!

ஒன்ராரியோ, மே 09

முக்கிய பல்கலைக்கழக வளாகங்களில் உள்ள யூத மாணவர்கள் தங்கள் யூத அடையாளத்தை மறைக்கநிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் மற்றும் அவர்களின் C2



# தமிழினப் படுகொலை நினைவு நாள் கனடா நாடாளுமன்றில் அனுஷ்டிப்பு

ஒன்ராரியோ, மே 09

கனடாவின் நாடாளுமன்றத்தில் தமிழினப் படுகொலை நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

பூர்வீகக்குடிகள் நலன்பேண் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கெரி ஆனந்தசங்கரியினால் இந்த நினைவு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட் டிருந்ததாக சமூக ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி உள்ளடங்கலாக பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் கலந்துகொண்டு ‘தமிழினப் படுகொலை நினைவு நாள்’ பற்றிய தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். C2

# தமிழின அழிப்புத் தொடர்பான நினைவு தினத்தை இருட்டடிப்பு செய்கிறது கனடிய தமிழ் காங்கிரஸ்

## கனேடியத் தமிழர் தேசிய அவை வன்மையாகக் கண்டனம்

ஒன்ராரியோ, மே 09

தமிழின அழிப்பு நினைவு நாளை இருட்டடிப்பு செய்ய கனடிய தமிழ் காங்கிரஸ் எடுக்கும் முயற்சிகளை வன்மையாக கண்டிப்பதாக கனேடியத் தமிழர் தேசிய அவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

‘இலங்கை அரசாங்கத்தால் நயவஞ்சகமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட ‘பாதுகாப்பு வலயத்தில்’ தஞ்சம் புகுந்த பல்லாயிரக் கணக்கான தமிழ் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான இலங்கை அரசாங்கத்தின் இன அழிப்பு தாக்குதலின் பதினைந்தாவது ஆண்டு நிறைவில், உலகம் முழுவதும் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ‘தமிழ் இனப்படுகொலை நினைவு நாளாக’ அதை நினைவுகூர மறுப்பதன் மூலம் கனடிய தமிழ் காங்கிரஸ் அந்த நிகழ்வை இருட்டடிப்பு செய்கிறது. கனேடிய நாடாளுமன்றம் ஒவ்வொரு மே மாதம் 18 ஆம் திகதியையும் ‘தமிழின அழிப்பு நினைவு நாள்’ என்று அங்கீகரிக்கும் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது. கனடாவின் சகல மட்ட அரசாங்கங்களும் மே மாதம் 18 ஆம் திகதியை ‘தமிழின அழிப்பு நினைவு நாளாக’ அங்கீகரிக்கின்றன. C2



## பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பிற்கான பயம், அவர்கள் யூத எதிர்ப்பு அலைகளை எதிர்கொள்வதால், பல்கலைக்கழகக நிர்வாகிகள் அவர்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டனர் என்று மாணவர்கள் குழுவொன்று தெரிவித்துள்ளது.

ஒன்டாரியோ, கியூபெக் மற்றும் ஆல்பர்ட்டாவில் உள்ள பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 6 மாணவர்கள், இஸ்ரேல்–ஹமாஸ் போரினால் தூண்டப்பட்ட தங்கள் வளாகங்களில் யூத விரோதம் அதிகரித்து வருவது குறித்து எச்சரிக்கை எழுப்புவதற்காக நாடாளுமன்றத்திற்கு வருகை தந்திருந்தனர்.

அந்தோனி ஹவுஸ்ஃபாதர் உட்பட பல லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த நிகழ்வில் சமுகமளித்திருந்தனர்.

'பல்கலைக்கழகத்தில் கிப்போட் அணிந்திருந்த எனது நண்பர்கள் இப்போது பேஸ்பால் தொப்பிகளை அணிகின்றனர்' என்று கனேடிய யூத மாணவர் சங்கத்தின் நிறுவனர் நாட்டி பிரஸ்மேன் கூறினார்.

'இது நாம் யூதர்களாக இருப்பதில் குறைவான பெருமை கொள்வதால் அல்ல, மாறாக நமது பல்கலைக்கழகங்கள் வெளிப்படையாக யூதர்களாக இருப்பது நமது உடல் மற்றும் உணர்ச்சிப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் சூழலை வளர்த்து உருவாக்கியுள்ளது.' என அவர் சுட்டிக்காட்டினார்.

## தமிழின அழிப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசாங்கமும் அதன் முகவர்களும் நீதிமன்ற சவால்கள் மற்றும் சட்ட அச்சுறுத்தல்கள் மூலம் தமிழின அழிப்பை மறுத்து திரிப்புபடுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர். உலகலாவிய ரீதியில் பரவலாக கண்டனம் செய்யப்பட்ட 'இமாலயப் பிரகடனத்தில்' கனடிய தமிழ் காங்கிரஸ் பங்கேற்பது, சர்வதேச விசாரணைகளில் இருந்து இலங்கையைப் பாதுகாக்கும் ஓர் அப்பட்டமான முயற்சியாகும். தமிழ் இன அழிப்பை வெளிப்படுத்த மறுத்ததற்காக கனடிய தமிழ் காங்கிரஸ் அனைத்து புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளாலும், தமிழர் தாயகத்தில் இயங்கும் சமூக அமைப்புக்களாலும் தொடர்ந்து கண்டிக்கப்படுகிறது. இது இன அழிப்பை மறுத்து அதை திரிபுபடுத்தும் முயற்சியாகவும் பலரால் பார்க்கப்படுகிறது.

தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இன அழிப்பை அவர்களின் நிகழ்வுகளில் தெளிவாகக் கூற மறுத்தும் மற்றும் திரிபுபடுத்தும் கனடிய தமிழ் காங்கிரஸை வன்மையாகக் கண்டிக்கிறோம். தமிழ் இன அழிப்பு மறுப்பாளர்களுடன் எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்வதைத் தவிர்க்குமாறும் எங்களது அரசியல் பிரதிநிதிகளையும் தமிழ் கனேடியர்களையும் கேட்டுக்கொள்கிறோம். கனடிய தமிழ் காங்கிரஸின் இந்த செயற்பாடு, தமிழ் இன அழிப்பால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களுக்கான நீதிக்காக தொடர்ந்து போராடி வரும் தமிழ் கனேடியர்களின் நம்பிக்கையை அப்பட்டமாக மீறுவதோடு அவர்களின் விருப்பங்களுக்கும் எதிரானதாகும்.' – என்று உள்ளது.

## தமிழினப் படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனடியத் தமிழர்களுக்கான தேசிய பேரவை, நாடு கடந்த தமிழீர அரசாங்கம், கியூபெக் தமிழ் சமூக நிலையம் போன்ற அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் உரையாற்றினர்.

இறுதிப்போரின் போது பாதிக்கப்பட்டு தற்போது கனடாவில் தஞ்சமடைந்துள்ள பிரணவன் கந்தவேலும் இதன்போது தமது இறுதி யுத்தகால துன்பியல் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

கனேடிய நாடாளுமன்ற வளாகத்தில் இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருந்த அமைச்சர் கெரி ஆனந்தசங்கரி, உயிரிழந்தவர்களை நினைவுகூரும் அதே வேளையில், போரில் தப்பிப்பிழைத்துத் தமது வாழ்க்கையின் நிகழ்வுகளை தொடர்ந்தும் பகிர்ந்து வரும், தப்பிப்பிழைத்தவர்களின் குரல்களாக இருக்கும் பிரணவன் போன்றவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார் எனவும் குறிப்பிட்டார்.

உலகெங்கிலும், இதேபோன்று போரினால் தப்பிப்பிழைத்த, தமது அன்புக்குரியவர்களை இழந்தவர்களுடன் தொடர்ந்தும் தாம் இருக்கின்றார் என அவர் தெரிவித்தார்.

'இன்று நாங்கள் செய்ய விரும்பிய ஒரு முக்கியமான விடயம் அனைவரையும் ஒன்று சேர்ப்பதாகும். நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த அமைப்புக்களை இங்கு கொண்டு வர விரும்பினோம். ஐக்கியமான குரலை நாங்கள் கொண்டிருப்பது முக்கியமாகும். நடந்தது இனப்படுகொலை என்பதை அங்கீகரித்தல் அல்லது பொறுப்புடைமை மற்றும் நீதியை நோக்கிய பாதை என்பது ஒரு பிளவுபட்ட செயற்பாடாக இருக்கக் கூடாது எனவும், அது அனைவரையும் ஒன்று சேர்க்கும் ஒன்றாக இருக்க வேண்டும். தமிழ் மக்கள் அனைவரும் இந்த முயற்சியில் ஒன்றுபட வேண்டும் என நான் எதிர்பார்க்கின்றேன்' என அவர் மேலும் கூறினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதனை உறுதி செய்வதற்காக கனடா தொடர்ந்தும் மைய குழுவில் அங்கம் வகித்திருக்கும் என அவர் சுட்டிக்காட்டினார்.

'உலகெங்கிலும் நடக்கும் சமீபத்திய நிகழ்வுகளைப் பற்றி நான் கருத்து தெரிவிக்க விரும்புகிறேன், மத்திய கிழக்கு என்பது இரத்தக்களரி நிறைய சோகங்கள் மற்றும் பயங்கரமான சம்பவங்கள் மற்றும் இரவில் தூங்கும்போது நாங்கள் ரஃபா மக்களைப் பற்றி சிந்திப்பதாக' அவர் தெரிவித்தார்.

இந்தக் கொடூர சம்பவத்தையும், உயிரிழப்புகளையும் நாம் சகஜப்படுத்த முடியாத நிலையில், அப்பாவி குழந்தைகளின் மரணத்தை சாதாரணமாக்க முடியாத நிலையில், இது ஒரு கணம் நிறுத்தப்படுவதற்கு நாம் ஒற்றுமையையும் ஆதரவையும் தெரிவிக்க வேண்டும்' என அவர் குறிப்பிட்டார்.

உலகெங்கிலும், சூடான், யேமன் மற்றும் போராடும் அரை டஜன் நாடுகளில் உள்ளவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும் எனவம், போர்கள் மக்களை கொல்லும் எனவும், நாம் அனைவரும் அமைதியுடனும் நல்லிணக்கத்துடனும் வாழக்கூடிய அமைதியான உலகத்தையே விரும்புகிறோம் எனவும் அவர் மேலம் தெரிவித்தார்.

CANADIAN TAMIL COLLECTIVE
கனேடியத் தமிழர் கூட்டு

CANADIAN TAMIL COLLECTIVE
கனேடியத் தமிழர் கூட்டு

# இலங்கை அரசின் இனவழிப்புப் போரில் பலியானோருக்காக நினைவு வணக்கம்

## கனேயடித் தமிழர் கூட்டு நேற்று ஊடக அறிக்கை

ஒன்ராரியோ, மே 09 –

இலங்கை அரசின் இனவழிப்புப் போரில் பலியாகியுள்ள ஆயிரக்கணக்கான உயிர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நினைவு வணக்கத்தைச் செலுத்துவதோடு, கனேடியத் தமிழர் கூட்டாக எமது மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பில் பாதிக்கப்பட்டவர்களுடனும், உயிர் பிழைத்தவர்களுடனும் ஒரு கூட்டாகவும், ஒற்றுமையாகவும் மிகவும் உறுதியாகவும் நாம் நிற்கின்றோம் என கனேடியத் தமிழர் கூட்டும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கனேயடித் தமிழர் கூட்டினால் மே மாதம் 8ஆம் திகதி ஊடக அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

1. இலங்கை அரசின் இனவழிப்புப் போரில் பலியாகியுள்ள ஆயிரக்கணக்கான உயிர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நினைவு வணக்கத்தைச் செலுத்துவதோடு, கனேடியத் தமிழர் கூட்டாக, எமது மக்கள்

மீதி மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பில் பாதிக்கப்பட்டவர்களுடனும், உயிர் பிழைத்தவர்களுடனும் ஒரு கூட்டாகவும், ஒற்றுமையாகவும் மிகவும் உறுதியாகவும் நாம் நிற்கிறோம்.

2. கடந்த வருடம் டிசம்பரில் கனேடியத் தமிழர் பேரவை (CTC), உலகத் தமிழர் பேரவையுடன்(GTF) இணைந்து 'இமயமலைப் பிரகடனம்' என்ற பெயரில் ஆரம்பித்தபோது, கனேடியத் தமிழர் பேரவை மேற்கொண்ட ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளால் நாங்கள் அனைவரும் மிகுந்த அதிர்ச்சியும் ஏமாற்றமும் அடைந்தோம்.

3. CTC எமது சமூகத்துடன் எவ்விதஆலோசனைகளையும் நடத்தாமல், இமயமலைப் பிரகடனத்தை பௌத்த மதத் தலைவர்களுடன் இணைந்து மேற்கொண்டமை மற்றும் இலங்கை அரசாங்கத்துடனான அவர்களின் ஈடுபாடு, குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷவுடனான அவர்களின் சந்திப்பு என்பன, மிகவும் கவலை தரக் கூடியதாகவும், எமது மக்களின் அரசியல், சமூக விருப்புக்களைக் கருத்தில் கொள்ளாதமை என்பது எமது மக்களுக்கு மிகுந்த கரிசனையையும் உண்டு பண்ணி இருந்தது.

4. கனேடியத் தமிழர் பேரவை, கனேடியத் தமிழர்களை அர்த்தமுள்ள வழியில் ஈடுபடுத்தத் தவறியதன் காரணமாகவே, இத்தகைய ஒரு தவறான நடவடிக்கை பேரவைக்கு சாத்தியமானது என்பதை ஒரு கூட்டாக நாங்கள் அடையாளம் கண்டுகொண்டோம்.

5. CTC தனது உறுப்பினர்களை ஈடுபடுத்துவதற்கும், அவர்களது சொந்த உறுப்பினர்களுக்கும் பொது சமூகத்திற்கும் பொறுப்புக் கூறுவதற்கும், அமைப்புக்குத் தேவையான கொள்கை, நடைமுறைகள் மற்றும் கட்டமைப்புகள் உள்ளன என்பதை உறுதிப்படுத்த, CTC சீர்திருத்தப்படவேண்டும் என்பதையும் நாங்கள் கண்டறிந்தோம். அவர்களின் செயல்களில் வெளிப்படைத் தன்மை இருக்கவேண்டும் என்பதை நாம் வலியுறுத்துகின்றோம்.

6. கனேடியத் தமிழர்கள் கூட்டாக ஒன்றிணைவதன் நோக்கம், CTC யினது ஜனநாயகம், பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும், அதன் இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் முன்னுரிமைகளை அமைப்பதில் சமூகத்துடன் தொடர்ந்து ஈடுபாட்டை உறுதிப்படுத்துவதற்கும், அது கட்டமைப்பு மாற்றங்களுக்கு உள்ளாகியிருப்பதை உறுதிசெய்வது மட்டுமே.

7. மேலும், இச்செயற்பாட்டில், தொடர்ச்சியாக மக்களின் கருத்துக்களை உள்வாங்கி CTC தம்மை சீர்திருத்தி, உண்மையாகவே கனேடியத் தமிழர்களின் குரலாக மாறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு CTC க்கு அழைப்பு விடுத்துள்ளதால், சமூகத்தின் குரல் எங்களோடு உள்ளடக்கப்படுவதை உறுதிசெய்யத் தொடர்ந்தும் நாம் கவனம் செலுத்தி வருகிறோம்.

8. இமயமலைப் பிரகடனத் திட்டத்தை தாங்கள் இலங்கையில் உள்ள அமைப்புகளிடம் ஒப்படைத்ததாக CTC பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளதை நாங்கள் கவனத்தில் எடுத்திருக்கின்றோம். இமயமலைப் பிரகடனத்தின் தொலைநோக்கு, இலங்கை மக்களுடன் கலந்தாலோசித்து வடிவமைக்கப்படும் என்றும் CTC யின் அறிக்கை மேலும் வலியுறுத்தியுள்ளது. அவ்வாறு இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் பூரணமான பங்குபற்றுதலுடன் மட்டுமே எந்த ஒரு நல்லிணக்க முயற்சியும் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதில் நாங்கள் மிகவும் உறுதியாகஉள்ளோம்.

9. மிகச் சமீபத்தில் CTC அதன் உறுப்பினர்கள் மற்றும் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு ஒட்டாவாவில் உள்ள பார்லிமென்ட் ஹில்லில் ஒரு நினைவு வணக்க நிகழ்விற்கான அழைப்பை அனுப்பியது. அவ்வறிக்கையில், தமிழர்கள் மீது இனவழிப்பு மேற்கொள்ளப்பட்டது என்பதை ஒப்புக்கொள்ளவில்லை என்பது மட்டுமல்லாமல், மிக முக்கியமாக, இனவழிப்பாளர்களான இலங்கை அரசாங்கம் பற்றிய எந்தக் குறிப்பும் அதில் உள்ளடக்கப்படவில்லை.

10. இது போன்ற அறிக்கைகள் மற்றும் செயல்கள் ஆகியன நீதியைப் பெறுவதற்கும், இனவழிப்பாளர்களைப் பொறுப்புக் கூறவைப்பதற்கும் மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் சாத்தியக்கூறுகள் உள்ளதால், இவ்விடயத்தில் மக்களின் உடனடிக் கவனம் அவசியமானது என்று நாங்கள் உணர்ந்துள்ளோம்.

11. கனேடியத் தமிழர் பேரவை வெளிப்படையாக எமது மக்கள் மீதானஇனவழிப்பை முன்நிறுத்தி குறித்த நினைவு நிகழ்வை நடத்த முயலாதமை, இனவழிப்புப் போரில் உயிர் பிழைத்தவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் அதிக வலியை ஏற்படுத்தியதாக நாங்கள் உணர்ந்தோம்.

12. இவ்விடயத்தில் கனடாவில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகள் மற்றும் நமது சமூகம் என்பவற்றின் ஒன்றுபட்ட குரல் என்பன, மிக முக்கியமான இவ்விவகாரத்தில் CTC சரியான பாதையை தேர்ந்தெடுக்க உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்.

13. வெவ்வேறு துருவங்களாக செயல்பட்டு வரும் எமது சமூக அமைப்புக்களை ஒன்றிணைத்து செயல்படுவதற்கான வழிகளைக் கண்டறிய எங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் போராடி வருகின்றனர்.

தொடர்ச்சி ▼

# இலங்கை அரசின் இனவழிப்புப் போரில் பலியானோருக்காக நினைவு வணக்கம்

தொடர்ச்சி ▲

மேலும், ஒரு கூட்டாக எங்கள் செயல்பாடுகள் எப்போதும் எங்கள் நிறுவனங்களின் போதாமையை முன்னிலைப்படுத்தும் நோக்கத்துடன் இருந்தன. எமது செயல்பாடுகள் ஒரு போதும் சமூகப் பொலிஸாராகவோ அல்லது எமது சமூக அமைப்புக்களை சேதப்படுத்தவோ கூடாது என்பதில் நாங்கள் மிகவும் உறுதியாக உள்ளோம்.

14. இந்நேரத்தில், கனேடியத் தமிழர் பேரவை நாடாளுமன்றத்தில் தமது நிகழ்வை இரத்து செய்ய தீர்மானித்துள்ளது என்ற அறிவிப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கின்றோம். எனினும், தமிழர்கள் மீதான இனவழிப்பு விவகாரத்தில் தங்களின் நிலைப்பாட்டை தெளிவாகஎடுத்துரைக்கும் ஒரு அறிக்கையையும் CTC வெளியிடும் என்றும் நாம் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம்.

15. மே 18, 2022 அன்று, கனேடிய நாடாளுமன்றம் தமிழர்கள் மீதான இனவழிப்பை அங்கீகரித்துள்ளது. மேலும், எண்ணற்ற தனிமனிதர்களின் தொடர்ச்சியான உழைப்பால் தமிழர்கள் மீதான இனவழிப்பை, கனடாவில் பல்வேறு மட்டங்களில் உள்ள ஆட்சி மன்றங்களும் அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

16. எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ச்சியான கட்டமைப்பு, கலாச்சார, அரசியல் அடக்குமுறைகளாலும், படுகொலைகள், இனக்கலவரங்கள், கொலைகள், வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் மற்றும் மனித உரிமை மீறல்களின் வலிமிகுந்த வரலாற்றையும் உள்ளடக்கிய, இனவழிப்பு என்பது, குறிப்பாக எமது சமூகத்திற்கு, ஒரு வாழ்வியல் அனுபவமாக உள்ளது என்றே நாங்கள் நம்புகிறோம். தமிழர்களின் மனதில் இது பற்றிய எவ்வித குழப்பமும் இல்லை.

17. எங்கள் சமூக அமைப்புக்கள் இப்பிரச்சினையின் தீவிரத்தைபுரிந்து கொண்டு, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்கள் சார்பாக ஆற்றுப்படுத்தல் , நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றிற்காக திறம்பட செயட்பட வேண்டும் என்பதை நாங்கள் உறுதிப்படுத்த விரும்புகிறோம்.

18. இந்த நேரத்தில் CTC இன் சீர் திருத்தத்திலும் நாங்கள் தொடர்ந்து ஈடுபடுவோம். எங்களின் இந்த முயற்சிக்கான சமூகத்தின் ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கவும், நாங்கள் சரியான திசையில் செல்கிறோம் என்பதை சமூகத்திற்கு நினைவூட்டவும் இவ் வேளையில் நாங்கள் விரும்புகின்றோம். ஆனால், செய்ய வேண்டிய வேலைகள் எங்களிடம் இன்னமும் நிறைய இருக்கிறன. அவ்வகையில் சமூகத்தின் தொடர்ந்த ஆதரவு எமக்கு தேவை.

19. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களுக்கான நீதியைப் பெறுவதற்கும், எங்கள் சமூக அமைப்புகள் திறம்பட, பொறுப்புணர்வுடனும், வெளிப்படைத்தன்மையுடன் தொடர்ந்து செயல்படுவதை

உறுதிசெய்வதற்கும், நாங்கள் தொடர்ந்தும் உறுதியுடன் இருக்கிறோம் என்பதை 'கனேடியத் தமிழர் கூட்டு' சார்பில் நாங்கள் உங்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறோம். – என்று உள்ளது.



# 'இஸ்ரேல் உருவாக்க விழா' ஒட்டாவாவில் பாதுகாப்புக் காரணங்கள் நிமித்தம் ரத்து!

ஒன்ராரியோ, மே 09

இஸ்ரேல் தேசத்தின் உருவாக்கத்தை ஒட்டிய கொடியேற்றும் விழாவை ஒட் டாவா நகர மண்டபத்தில் நடத்தும் திட்டம் பாதுகாப்புக் காரணங்களால் இரத்து செய்யப்பட்டுள்ளதாக நகர அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலியக் கொடி அடுத்த செவ் வாய்க்கிழமை நகர வளாகத்தில் உயர்த் தப்படும் எனவும், இந்த நிகழ்வு நகர மேயர், இராஜதந்திரிகள் மற்றும் யூத சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பங்கேற்கும் விழாவாக நடைபெறாது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வு 'பொது பாதுகாப்பிற்கு கணிசமான ஆபத்தை ஏற்படுத்தும்' என்று உளவுத்துறை தகவல்களின் காரணமாகவே, நிகழ்வு இரத்து செய்யப்படுவதாக நகர நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# கார்பன் பிடிப்பு, சேமிப்புத் தொழிநுட்பம் பயனுள்ளது என்கிறார் எரிசக்தி அமைச்சர்



ஒன்ராரியோ, மே 09

கனடாவின் எரிசக்தி அமைச்சர் கார்பன் பிடிப்பு மற்றும் சேமிப்பு தொழிநுட்பம் பயனுள்ளது மற்றும் மலிவு விலையிலானது எனத் தெரிவித்துள்ளார்.

ஆல்பர்ட்டா மின் நிறுவனம் திட்டமிட்ட கார்பன் சேமிப்பு திட்டத்திலிருந்து விலகிய நிலையில் எரிசக்தி அமைச்சர் ஜொனதன் வில்கின்ஸனின் அறிக்கை வெளியாகியுள்ளது.

'கார்பன் பிடிப்பு மற்றும் வரிசைப்படுத்தல் தொழிநுட்பங்கள் சிறப்பாக வருகின்றன, காலப்போக்கில், சுழற்சியில் செல்லும் மற்ற எல்லா தொழிநுட்பங்களையும் போலவே அவை உண்மையில் குறைந்த விலையைப் பெறுகின்றன' என்று ஜொனாதன் வில்கின்சன் குறிப்பிட்டுள்ளார்.

'தொழிநுட்பம் நிரூபிக்கப்படவில்லை என்று சொல்பவர்களுக்கு, நான் அவர்களிடம் அது உண்மையல்ல என்று கூறுவேன்' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கார்பன் பிடிப்பு, பயன்பாடு மற்றும் சேமிப்பு, CCUS என்றும் அழைக்கப்படுகிறது, அவை கார்பன் உமிழ்வை அவற்றின் மூலத்தில் சிக்க வைத்து பின்னர் அவற்றை மீண்டும் நிலத்தடிக்கு அனுப்பும் அமைப்புகளாகும்.

கனடாவின் காலநிலை திட்டத்தில் அவர்கள் முக்கிய பங்கு வகிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

கார்பன் பிடிப்பு 2030 க்குள் 16 மில்லியன் தொன்கள் உமிழ்வைக் குறைக்கும் அல்லது 2030 ஆம் ஆண்டில் அடுத்த இலக்கை அடையத் தேவையான கூடுதல் உமிழ்வு குறைப்புகளில் ஐந்து சதவீதம் வரை இருக்கும் என்று காலநிலை திட்டம் மதிப்பிட்டுள்ளது.

# பலஸ்தீன ஆதரவு கூடாரங்களிற்கு அரைவாசிக் கனேடியர்கள் எதிராம்!




ஒன்ராரியோ, மே 09

சுமார் அரைவாசி கனேடியர்கள் பலஸ்தீன ஆதரவு கூடாரங்களிற்கு எதிரான கருத்தைக் கொண்டுள்ளனர் என ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த வார இறுதியில் இடம்பெற்ற ஆய்வுக்கு பதிலளித்தவர்களில் 31 வீதமானவர்கள் மாத்திரமே இந்த கூடாரங்கள் மூலமான போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.அதே வேளை, 48 சதவீதமானவர்கள் பலஸ்தீன ஆதரவு போராட்டத்திற்கு எதிரான கருத்தைக் கொண்டிருக்கின்றனர்.

44 சதவீதமானவர்கள் இந்த கூடாரங்கள் நீக்கப்படல் வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

யூத எதிர்ப்பு கருத்துக்களை வெளியிட்டாலோ, வெறுப்பு பேச்சினை வெளியிட்டாலோ அந்த கூடாரங்கள் அகற்றப்படல் வேண்டும் என 33 சதவீதமானவர்கள் தெரிவித்துள்ளமையுடன், பேச்சு சுதந்திரத்தின் அங்கமாக இந்த போராட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும் என 23 சதவீதமானவர்கள் தெரிவித்துள்ளனர்.

# கொஸ்ட்கோ, லொப்லோ அங்காடிகளுக்கு 29 மில்லியன் டொலர் சலுகை வழங்குவதா?

## சீறுகின்றார் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர்



ஒன்ராரியோ, மே 09

கொஸ்ட்கோ, லொப்லோ போன்ற அங்காடிகளுக்கு 29 மில்லியன் டொலர்கள் சலுகை வழங்கியமை தொடர்பில் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் லிபரல் கட்சியை விமர்சித்துள்ளார்.

இந்த அங்காடிகளில் சக்தி சேமிக்கும் இலத்திரனியல் சாதனங்களுக்காக இந்த தொகை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொது மக்களின் பணத்தை இவற்றைப் போன்ற செல்வந்த நிறுவனங்களுக்கு வழங்குவதனை நிறுத்த வேண்டும் என புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங் குறிப்பிட்டுள்ளார்.

போதிய உணவைப் பெற்றுக்கொள்வதற்காக சிரமத்தை எதிர்கொண்டு வரும் மக்களுக்குப் பதிலாக இவ்வாறான நிறுவனங்களுக்கு வழங்குவதனை நிறுத்த வேண்டும் என அவர் மேலும் கூறியுள்ளார்.